...., சம்பாஷணைகள்
இதுதான் உங்கள் சூத்திரமா?
ரிக்கவும், இதிகாசம் தன்னுள்
னிடம் 'மின்னியது' போல்
ன் பாட்டில் எளிமையாகி
ர் - அடியார்கள் வரிசையில்
பாகிறது உங்கள் கைகளில்.
ன்-தன்னளவில்
ன்-பிறரளவில்
முறை, இதோ எழுதும்
ர. தவிப்பேன். என் "தாய்
வன் நான். விராட்டி என்
ணையும் தவிப்பும்...
நட்பாய் நடமாடும்
ாய்... மாலை நேரத்து
க்கம்தான்.
தும்...

டலை நானும் என்

ண்ணராய்...
ப்பது போல் இருந்தது.

**எஸ்.குமார்**
வை ஆரம்பப்பள்ளி
கப்பட்டினம் 611001

# கிருஷ்ண அர்ஜுனன்

## 1

உப்பரிகை விளிம்பில் வந்து நின்றதும் இருட்டில் ஒளிந்திருந்த குளிர்க்காற்று சட்டென்று அவனைத் தாக்கியது; அவன் மேலாடையைக் கலைத்தது. முகமும், மார்பும்; புஜங்களும் கை விரல்களும், வயிறும், இடுப்பும் ஒரு முறை நடுங்கி அடங்கின. உடம்பின் அவஸ்தை தாங்காமல் மனசு அவனை உப்பிரிகையினின்று பின்னடையச் சொல்லிற்று. பெரிய மரக் கதவுகளை அழுந்தச் சாத்தி ஒட்டகக் கம்பளியையோ, மான் தோலையோ போர்த்திக் கொள்ளத் தூண்டியது. உடம்பு மனசாலும், மனசு உடம்பாலும் இழுக்கப்படும் விதத்தை அவன் உற்று கவனித்தான், அப்படித்தான் குளிரும். இது குளிர் காலம். குளிரை நொந்து கொள்ளாதே. எதிர்த்து நில்; தாங்கு. இம்சைக்குப் பழகு, வேதனையை உள்வாங்கி அனுபவி. 'இந்தக் குளிருக்கு அஞ்சமாட்டேன்' என்று உரக்கப் பலமுறை சொல். இதில் உபத்திரவம் இல்லை. முதல் அம்புதான் வலிக்கும். அடுத்த அம்பு தைக்கும்போது முதல் அம்பின் வலி மறந்து விடும். 'இரண்டு, மூன்று' என்று தொடர்ந்து அடிவாங்கும்போது எல்லா வலியும் மறந்து,

அழித்தவனை அழிக்கும் ஆவேசம் புறப்படும். வலி இல்லாது போகும்.

எதிரியின் அம்பும் இந்தக் குளிரும் ஒன்றே. இந்தக் குளிரைத் தாங்கு. அவன், மேலாடையை வீசி எறிந்து விட்டு, குளிரை முரட்டுத்தனமாக ஏற்றான். உடம்பு நடுங்கியது. உஷ்ணத்திற்கு ஆவேசப்பட்டது. குளிர் அவனைத் தாக்கத் தாக்க அவனுக்குக் கோபம் வந்தது. இருட்டிலிருந்து ஒளிந்திருந்து தாக்கும் குளிரை எதிரியாய் நினைத்து 'எங்தே?' என்று தேடினான். அந்தத் தேடலுக்கு உடனே சிரித்தான்.

கைகளைப் பரபரவென்று தேய்த்துக் கொண்டு உஷ்ணப்படுத்தி கன்னக் கதுப்புகளில் வைத்துக் கொண்டான். நாண் இழுத்து, இழுத்துத் தழும்பேறிய கைகளிலிருந்து பிறக்க, உஷ்ணம் அவன் கன்னத்தில் சுகமாக இறங்கியது. உள்ளங்கைகளை வேகமாகத் தேய்த்துக் கொண்ட அசைவினால் உடம்பிலும் உஷ்ணம் பிறந்தது. குளிர் குறைந்தது. அதற்குள் உடம்பும் குளிருக்குப் பழக்கப் பட்டுவிட்டது. அவன், விறைப்புக்கு தோற்றுப் போனதால் இருட்டிலுள்ள குளிரும் அமைதியானது. சற்றுமுன் பார்த்து, தேடியதை நினைத்துக் கொண்டான்; மீண்டும் சிரித்தான்.

எல்லாமே எதிரியாக எனக்கு ஏன் தோன்றுகிறது? இதற்கு என்ன காரணம்? போராடும் ஆசையா? போராடி ஜெயித்து, இந்த உலகத்தில் எல்லாம் என் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்கிற வெறியா? இயற்கையைக் கூட எதிரியாக நான் நினைக்கத் தொடங்கி விட்டேன். போகிற வழியில் ஒரு மரக்கிளை மறித்தால் குனிந்து போக மனசு இடம் கொடுப்பதில்லை. தாண்டி குதிரையைச் செலுத்த கௌரவம் அனுமதிப்பதில்லை. வெட்டி அதை விலக்கி



விட்டுப் போகத்தான் மனசு துடிக்கிறது. கை இடை வாளுக்குப் போய், சட்டென்று மரக்கிளையைத் தறித்து, சர்வ சாதாரணமாய் நடக்கிறது.

'மலையைச் சுற்றிக் கொண்டு பாதை வழியே போனால் சுனையை அடையலாம்' என்று யாராவது வழி சொல்வார்கள்.

'எதற்குச் சுற்றிக் கொண்டு போகவேண்டும். காடுகளுடே ஏறி இறங்கினால் போயிற்று – சுனையை அடையலாம்' என்றுதான் மனசு கணக்குப் போடும். அப்படிப் போவதில் ஒரு பிரியம். முட்புதரை மிதித்து நசுக்கி, வழிமறித்த கொடியை வாளால் அறுத்து விலக்கி, தடை செய்யும் பாறையை நெம்பி உருட்டி, மலை உச்சிக்குச் சென்று ஆழ மூச்சு இழுத்துவிட்டு, நாலு திசை பூமியும் காலின் கீழ் கிடப்பதை கர்வத்துடன் பார்த்த, மதயானை மாதிரி சுனை நோக்கி ஓடுவது கொண்டாட்டமான விஷயம். ஏறும்போதாவது காலால் மிதிப்பதும், வாளால் தறிப்பதும் நடக்கும். சரிவில் இறங்கும்போது அந்தக் கணக்கு கூட வராது. ஓடுகிற வேகத்தில் சகலமும் சிதறும். தடைபடுத்துபவை துண்டு துண்டாகிவிடும். அங்கங்கே முட் செடியும், கொடியும் – உடம்பு கிழித்தாலும் அந்த உடம்புக் கிழியலோடு, கிழிந்து வழியும் ரத்தத்தோடு சுனையில் குதிப்பது பேரானந்தம். 'வலிக்கிறதே, எரிகிறதே' என்று மனசு மயங்காது. சுனைக் குளியல்தான் முக்கியம், அந்த பொங்கு புனலில் உடம்பு செலுத்துவதுதான் லட்சியம். அந்த வெறியில் இடர் என்று எதுவும் தோன்றாது. தோன்றாதபோது வலிக்கவும் செய்யாது. அந்த பொங்கு சுனையில் மனிதரோ, மிருகமோ, எவரும் அங்கு போனதே யில்லை 'யாரும் தொட்டுக் கலங்காத சுனை, அற்புத மூலிகைகள் நிறைந்த ஸ்படிக நீர் அது' என்று கேள்விப்பட்டு

அதில் முங்கி முங்கி குளித்துப் பேயாட்டம் ஆடி, போதும் போதும் என்று திளைத்து, அடுத்த வேலைகள் இருக்கின்றனவே என்கிற நினைப்பில் கரையேறும்போது 'இந்த மலையை எப்படிக் கடந்து வந்தோம்?' என்று வியப்பு ஏற்படும். கரையிலுள்ள மரங்களில் உள்ள பழங்களோ, காய்களோ, கிழங்குகளோமுன் பசியாற்றும். குளித்து உண்ட சுகத்தில் லேசாய் கண்கிறங்கியபடி, குதிரையில் அமர்ந்து மலையைச் சுற்றி வீடு திரும்புவது வழக்கம்.

அப்படித் திரும்புகிறபோது உடம்பின் காயங்கள் முணுமுணுக்கும். சிறு சிறு வலிகள் தெரிய வரும். அந்த வலிகளைத் தடவிச் சிரிப்பது சந்தோஷமாய் இருக்கும். புனலில் துளைவதற்காக எத்தனை வலி தாங்கினோம் என்று இறுமாப்பாக இருக்கும். உடம்பின் தோல் கிழிந்ததும் ஒரு வலி, புனலில் துளைந்ததும் ஒரு வலி. துளைந்து அலுத்து வீடு திரும்புவதும் ஒரு வலி என்று வாழ்வு முழுவதுமே வலியாய், வலிப்பதே இயல்பாய், வலியோடு இருப்பதே வாழ்வாய் புரிய வரும். வலியின் அளவுதான் அவ்வப்போது வித்தியாசப்படும்.

இங்கேயும் அளவு மாறிவிட்டது. உப்பரிகை தொட்ட போது உண்டான குளிர் இப்போது இல்லை. இப்போதும் குளிர்கிறது. இருப்பினும், கதவு திறந்ததும் அந்த வெட்ட வெளி தாக்கிய குளிர் இப்போது இல்லை. உடம்பில் எதிர்ப்பு சக்தி அதிகமாகிவிட்டது. குளிரைக் தாங்க உடம்பு மடமடவென்று கற்றுக்கொண்டு விட்ட்து. குளிரோடு பழக்கப்படுத்திக் கொண்டு விட்டது. இனி அதிகம் குளிராது. ஒரு கணத்தில் குளிரோ குளிரால் ஏற்படும் வலியோ தெரியாது போகலாம்.

பழக்கம்தான் காரணம். பழக்கத்திற்கு உட்பட மறுக்கின்ற மனசை வளைத்து, வலிந்து பழக்கத்திற்கு



உட்படு என்கிற திண்மைதான் காரணம். பழக்கப்பட்ட உடம்பு குளிருக்கோ, வலிக்கோ மரத்துப் போகும். புனல் குளியலும் அப்படித்தான். முதல் முறை குளித்தது போல் மறுமறை அமையாது. ஒரு மாற்று குறைவுதான். இந்தப் புனல் முழுவதும் என்னுடையது. நான் குளிப்பதற்கு என்று நீராடக் கரையேறியபோது அந்தப் புனலை ஒருமுறை நன்றியோடும், சிரிப்போடும் பார்க்கத் தோன்றிற்று. மறுபடி புனலுக்குள் குளிக்கப் போனாலும், போகும்போதே முதல் குளியல் ஞபாகம் வந்து இரண்டாம் குளியலை நிதானப் படுத்தும். ஒரு இடைவெளி அவசியம். நான் இப்போது ஒரு இடைவெளி கருதிதான் இங்கு இந்த உப்பரிகையில் வந்திருக்கிறேனோ, புனலில் குளித்த பிறகு கரையேறி தலைதுவட்டுவது போல் குளிரால் என்னைத் துடைத்துக் கொள்கிறேனோ...''

அந்த இளைஞன் அர்ஜுனன், குந்தியின் மைந்தன் தன் உடம்பை தானே தடவிக் கொண்டான். 'இந்த உடம்பெல்லாம் தன் மனைவி சுபத்திரையின் உடம்பு பட்ட இடம்' என்று நினைத்துக் கொண்டான். உப்பரிகைக்குக் கீழே 'இந்திரப்ரஸ்தம்' என்று அழைக்கப்பட்ட அந்த அழகிய நகரில் அரண்மனைக் காவலாளிகள் தீவட்டிகளோடு அலைந்து, நகரத்தின் காவலாளிகளுக்கு உரக்கக் குரல் கொடுத்து, தாங்கள் விழிப்பைச் சொல்லி அவர்கள் விழித்திருக்கிறார்களா என்று சோதித்துக் கொண்டார்கள். தீப்பந்த வெளிச்சம் அருகே வர, அர்ஜுனன் உப்பரிகையினின்று பார்ப்பதை கவனித்தாலும் கவனிப்பார்கள். 'அர்ஜுனன் ஏன் நிற்கிறான்?' என்று பதறினாலும் பதறுவார்கள். 'ஏதும் உத்தரவு உண்டா?' என்று எதிர்பார்ப்பது போல் அங்கேயே நிற்பார்கள். அர்ஜுனன், அவர்களைப் பதட்டமடையச் செய்யாதிருக்க, மெல்ல

உப்பரிகையினின்று பின்வாங்கினான். பெரிய மரக்கதவுகள் திறந்து உள்ளே போய் மறுபடி மூடினான். அந்த அறையில் உள்ள பெரிய கட்டிலில் சுபத்திரை ஒருக்களித்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஒரு குத்துவிளக்கின் ஒளி அவள் உடம்பை போர்த்தியிருந்தது.

சுபத்திரைகூடப் புனல்தான். அணுக முடியாது. இது வரை யாரும் குளித்தே இராத புனல். அற்புதமான மூலிகைகள் நிறைந்த ஸ்படிகம் போன்ற புனல். அர்ஜுனன் மலையேறி, ஆவேசமாய் மலை இறங்கி துளைந்து துளைந்து நீராடிய புனல். அவன் கலக்கிக் குளித்த புனல்.

சுபத்திரை கலைந்திருந்தாள். களைத்திருந்தாள். அர்ஜுனன் உற்றுப் பார்ப்பது அவள் உள் மனசுக்குத் தெரிந்ததுபோலும். அவளை விட்டு அகன்று உப்பரிகை போய்விட்டு வந்தது அவளுக்குத் தெரியாதுபோலும். அருகிலேயே இருக்கிறான் என்ற எண்ணத்தில் பஞ்சணையில் கை துழாவிற்று. திசை தெரியாது படுக்கையின் திண்டில் கால் பரவிற்று. அதை அர்ஜுனன் என்று இறுக்கிக் கொண்டது. அவள் அசைவுகளைக் கண்ட அர்ஜுனன் சிரித்தான். ஆனந்தப்பட்டான்.

அவள், 'அத்வைத நிலையில் இருக்கிறாள்' என்று நினைத்துக் கொண்டான். 'எல்லாமே அர்ஜுனன் என்ற மயக்க நிலையிலிருக்கிறாள்' என்பதாய் யோசித்தான். ஒரு சாளரக்கதவு திறந்து வெளியே இருக்கும் குளிர் காற்றை உள்ளே அனுமதிக்க, அந்தக் குளிர் காற்று உள்ளே பாய்ந்து, தரைமீது குதித்து அவள் மீது பாய்ந்து புரள, கொஞ்சம் நடுங்கி அக்குளிர் காற்றையும் அர்ஜுனன் என்று நினைப்பாளோ, 'பல்குணா, பல்குணா' என்று தழுவுவாளோ? கற்புள்ள நங்கையருக்கு கணவனே குளிர். கணவனே உஷ்ணம். கணவனே உயிர். கணவன் உடல்.



''சுபத்திரை, சுபத்திரை! நான் உன்னை நேசிக்கிறேனடீ...'' மெல்ல அவள் அருகில் அமர்ந்து, அவள் கார் குழலைக் கோதி விட்டான். கன்னங்களை வருடினான். உதட்டில் விரல் வைத்து மீட்டினான். கழுத்துப் பிடரியைத் தடவிவிட்டான். முதுகிலும், தோள்களிலும் உள்ளங்கையால் வருடி சுகப்படுத்தினான். சுபத்திரை, புருஷன் தொடுகிறான் என்று உணர்ந்து, சிணுங்கி அரை மயக்கத்தில் அவனை அணைத்துக் கொள்ள கைகள் விரித்தாள், அர்ஜுனன் மறுபடி புனலில் குளிக்க ஆசைப் பட்டான்.

மறுமுறை குளிக்கும் பொழுது முதல் குளியல் ஞாபகம் வந்தது. முதல் குளியல் நினைவு வரும்போது அதற்காய் மலையேறியதும், உச்சியில் நின்று மூச்சிழுத்து புனலை உற்றுப் பார்த்ததும், அது என்னுடையது என்று ஆவேசமாய் ஓடியதும் நினைவுக்கு வந்தன. குளித்ததும் சுகம், இப்போது குளிப்பதும் சுகம். குளிக்க பிசாசாய் பறந்ததும் சுகம். எல்லாமும் போராட்டம். இதோ இவளை இறுகத்தழுவி இன்பம் துய்ப்பதுகூட ஒருவகை யுத்தம். மிகப் பெரிய முரட்டுத்தனம். விரும்பி விரும்பி மனசு அலையும் வன்முறை வாழ்வின் எல்லா அனுபவமும் வன்முறையாகத்தான் இருக்கிறது. தபஸ்கூட வன்முறையாய்த்தான் தெரிகிறது. உடம்பு உண்பதும் வன்முறை. உடலும் வன்முறை. தனித்து தவமிருத்தலும் வன்முறை, குடிமக்களுடன் அரசனாய் வாழ்ந்திருப்பதும் வன்முறை. ஏகாந்தமாய் காடுகளில் அலைவதும் வன்முறை.

ஆழ யோசித்துப் பார்த்தால் இந்த உலகத்தின் ஆதாரம் வன்முறைதான். இடைவிடாத யுத்தம்தான். யுத்தம் செய்யாது ஒரு உயிரும் இங்கு இல்லை. எதிர்ப்பு காட்டாத பிராணி எதுவுமில்லை. அமைதியும், வன்முறையும்

ஒன்றையொன்று பற்றியிருக்கின்றன. ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. நத்தையின் உடம்பு அமைதியெனின் அதன் கூடு வன்முறை. மரவட்டையின் நகர்வு அமைதியெனின் அதன் சுருளல் வன்முறை. பூக்கள் அமைதியெனில் பாறையையும் துளைத்துப் போகும் மரத்தின் வேர்கள் வன்முறை. அமைதி பூக்க வன்முறை அவசியமாகிறது. வன்முறையால் அமைதி பூக்கிறது. நிரந்தரமான அமைதியோ, நிரந்தரமான வன்முறையோ இவ்வுலகில் இல்லை. நத்தையின் உடம்பும், கூடும் ஒன்றாவதுபோல், ஒரே விஷயமென்பது போல் இங்கு வன்முறையும் அமைதியும் ஒரே விஷயம். இதைப் பிரிக்க இயலாது. பிரித்தால் நத்தை செத்துப்போகும். இவ்வுலகமும் அவ்வாறே.

மனைவியோடு கூடிய வன்முறைக்குப் பிறகு அர்ஜுனனுக்குள் ஒரு அமைதி வந்தது. புனலில் குளித்து தலை துவட்டுவதில் ஒரு கிறக்கம் வந்தது. சுபத்திரையை அடைய ஒரு வன்முறை தேவையாக இருந்தது. அந்த வன்முறைக்கு முன்னர் ஒரு அமைதி வேண்டியிருந்தது. அந்த அமைதியிலிருந்துதான் ஒரு வன்முறை தோன்றுகிறது.

**அ**து தீர்த்த யாத்திரை காலம். விரதமிருந்து துறவுக்கான உடைகள் பூண்டு அரசவை விட்டு, அரண்மனை விட்டு வில்லும், அம்பும் வீட்டிலேயே வைத்துவிட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வன்முறை இல்லையென்று உறுதி பூண்டு தனியே, ஏகாந்தியாய் நதிகளைத் தேடியும், புண்ணிய தலங்கள் தேடியும் போன காலம். அமைதியான காவிரிக் கரையில்தான் சுபத்திரை பற்றி நினைவு வந்தது. காவிரி பாயும் கந்தக பூமியில் நடக்கும்போதுதான் தனக்கு சுபத்திரை மனைவியாகக் கிடைக்க வேண்டுமே என்கிற



ஆசை எழுந்தது. கடலும் கடலும் கூடுகிற குமரிமுனையில் தான் அவளை அடைந்தே ஆகவேண்டுமென்கிற வெறி வந்தது. ஒரு பக்கம் கடல், பெண்ணின் சிரிப்பாய் கலகல வென்று நகைப்பாய், சுருள் சுருள் அலைகளாய் புரண்டு கொண்டிருக்க, எதிர்ப்பக்க கடல் ஆவேசமாய் அடித்து ஆணாய்ப் புரண்டுகொண்டிருந்தது. முனையில் இரண்டும் கலந்து கைகோத்து எகிறி நுரை கொப்பளிக்கப் பரவிக் கிடந்தன. அங்கேதான் பல்வேறு வர்ணங்களில் மணல்கள் இருந்தன. அங்கே சங்கமம் பார்த்த சந்தோஷம்தான் வடக்கே திரும்ப வைத்தது. துவாரகை எங்கே என்று கடல் ஓரமாகவே ஓடி, ஓடி வரவழைத்தது. துவாரகையின் விளிம்பு அடைந்ததும் உள்ளே போகத் தயக்கமாய் இருந்தது. எதற்கு பேராசை... சுபத்திரை வேண்டாமென்று திரும்பிவிடலாமா' என்று உள்ளே சிறிது ஆட்டம் கண்டது. நண்பனின் தங்கையை நேசிப்பது சரியா, இது நம்பிக்கை துரோகமில்லையா? இதை வெளிப்படுத்த - நட்பு முறிந்தால் என்ன ஆவது? நட்பு முக்கியமா? நங்கை முக்கியமா? என்கிற கேள்வி எழுந்தது. ஆழ்ந்து யோசிக்க, நட்பு முக்கியம், நங்கையும் முக்கியம் என்ற பதில் கிடைத்தது. நண்பனின் தங்கையை விரும்புகின்றோமென்று நண்பனிடம் சொல்வதுதான் முறை என்கிற எண்ணம் வந்தது.

ஆனால், நண்பனைப் பார்க்க துவாரகைக்குள் போக வேண்டும். உள்ளே போய் தன்னை அர்ஜுனன் என்று சொல்லிக்கொள்ள வேண்டும். அங்கே ராஜமரியாதையுடன் வரவேற்பு தரப்படும். 'வந்து பார்த்தாகிவிட்டதல்லவா... சிறிது நாள் இருந்து சீராடிவிட்டாயல்லவா... அர்ஜுனா, நீ உன் ஊருக்குக் கிளம்பு' என்று திருப்பி விடுவார்கள். அர்ஜுனன் வந்தால் துவாரகையின் தலைவர் பலராமன்

கொஞ்சம் கண்காணிப்பாகவே இருப்பார். உபசரிக்க என்று ஆட்கள் அதிகம் போட்டு அவன் அசைவைக் கவனித்துக் கொண்டேயிருப்பார்.

'ஊர் முழுக்க அர்ஜுனனுக்கு சுற்றிக்காட்டு... நமது கன்னிமாடம் தவிர', என்று கட்டளையிடுவார். யாதவர்கள் தங்கள் குலப்பெருமையை கறவைகள்மீதும், பெண்கள் மீதும் அதிகமாக வைத்திருந்தார்கள். கறவைகளைக் கவர்கிறவனையும், கன்னியைத் தொடுகிறவர்களையும் வெறுமே விடமாட்டார்கள். கடைசிவரை சுபத்திரை இருக்கிற கன்னிமாடத்தைக்கூட கண்ணால் பார்க்க முடியாது.

அண்ணா தருமரை அனுப்பி பலராமனிடம் சுபத்திரையைப் பெண் கேட்கச் சொல்லலாம்.

''அர்ஜுனனுக்கா என் தங்கை சுபத்திரையையா கேட்கிறீர்கள்? நீங்கள் க்ஷத்ரியர்கள், சுபத்திரை யாதவ குலப்பெண். உங்கள் முரட்டுத்தனம் எங்கள் குலப் பெண்களுக்கு ஒவ்வாது. மேலும் அர்ஜுனன் முன்கோபி. உணர்ச்சிவசப்படுகிறவன். காமி, பெண்களின் பின்னால் திரிகிறவன். தான் அழகன் என்ற இறுமாப்பு கொண்டவன். சுபத்திரை அவனுக்கு ஏற்றவளல்லவே... நல்ல க்ஷத்ரிய குலப்பெண்ணாகப் பார்க்கலாமே. இதையும் தவிர அர்ஜுனனும், என் தம்பி கிருஷ்ணனும் உயிருக்குயிரான நண்பர்கள். நட்பை உறவாக்கிக்கொள்வதில் சங்கடங்கள் நேரும். நட்பின் உரிமையில் ஏதாவது செய்தால் உறவின் முறைமை அதற்கு இடம் கொடாது. உறவின் முறைமையை முன் வைத்துப் பார்த்தால் நட்பு வளப்படாது. நண்பர்கள், நண்பர்களாகவே இருக்கட்டுமே, உறவு எதற்கு?''

பலராமன் மறுத்துவிடக்கூடும். துவாரகையின் எல்லையிலிருக்கும் ரைவ பர்வதம் என்ற மலையின் சரிவில் உலவி என்ன செய்வது என்று அறியாமல் தவித்தான்.



பேசாது சுபத்திரையைக் கடத்திக் கொண்டு போய் விடலாமா? கடத்திக் கொண்டு போய் கடிமணம் புரிந்து கொள்ளலாமா? பீமனிடம் மட்டும் ரகசியமாக தன் மனசைச் சொல்லி, மாறு வேடம் பூண்டு துவாரகைக்குள் பீமனோடு புகுந்து, கன்னிமாடத்தை நோக்கி இரவோடு இரவாய் சுபத்திரையைக் களவாடிப் போகலாமா... நான் தொட்ட பெண்ணை இனி யார் தொடுவார் என்று கொக்கரிக்க லாமா... எதிர்த்து வரும் பலராமரையும், கிருஷ்ணரையும் காண்டீபத்தில் நாண் பூட்டி அதிரச் செய்து சரமாரியாய் அம்பு எய்து...

சே... கிருஷ்ணன் மீது எப்படி அம்பு எய்வது? நண்பனுக்கெதிரே எப்படி போர் தொடுப்பது? தோழமையும் அன்பும், எது கேட்டாலும் கொடுக்கும் பண்பும் கொண்ட அந்த சியாமள வர்ண கண்ணன் மீது எப்படிப் போர் தொடுப்பது? அப்படி போர் என்று வந்தால் பலராமனை தோற்கடிக்க முடியும். புறங்காட்டச் செய்ய முடியும். கண்ணனைச் சமாளிக்க முடியுமா? கம்சனை அடித்து வீழ்த்தியவனை, மாயத் திறனோடு யுத்தம் புரிபவனை என் அம்புகள் தடுத்து நிறுத்துமா?

அவனோடு எப்படி யுத்தம் செய்வது. அவன் சிரித்தால் நான் சோர்ந்து போவேன். அவன் பேசினால் நான் பதட்டமாவேன். அவன் பண்பு கெட்டவனே என்று சீறினால் நான் பரிதவித்துப் போவேன். 'என் மீதே அம்பு தொடுக்கிறாயா... இதுதான் உன் நட்பா?' என்று வினவினால் வெட்கம் கொண்டு தரையில் அமர்வேன்.

களவாடல் முடியாது. கன்னிகையை தானமாகத் தருவது நடக்காது. பிறகு என்ன செய்ய? இப்படித் துறவியாகவே இருந்துவிடலாமா... இல்லை. இல்லை... எனக்கு பைத்தியம் பிடித்துவிடும். 'சுபத்திரை' சுபத்திரை

என்று பித்தாகி இந்திரப்பிரஸ்தம் எங்கிருக்கிறது என்று கூடத் தெரியாமல் அலைய நேரிடும். நானில்லையெனில் பீமனில்லை. பீமனில்லையெனில் தருமனில்லை. தர்மர், பீமன், அர்ஜுனன் இல்லையெனில் நகுல சகாதேவன் இல்லை. ஐந்து சகோதரிகள் இல்லையெனில் அம்மா இல்லை. அம்மா குந்திதேவி இதுவரை பட்ட அத்தனை கஷ்டங்களும் வீண். அர்ஜுனன் என்கிற பிள்ளையால் அவன் நெஞ்சில் தோன்றிய காமத்தால் அககுடும்பம் அழியும். ஊர் சிரிக்கும். பரத கண்டம் முழுவதும் பாண்டவர்கள் அர்ஜுனன் காமத்தால் அழிந்த கதை பேசப்படும். கௌரவர்களுக்குக் கொண்டாட்டமாகப் போகும். அவர்களின் கொடுமை இன்னும் பரவும். அடக்க ஆளில்லாத க்ஷத்ரிய குலம் அலைபாயும். அவன் அடித்து இவன், இவன் அடித்து அவன் என்று வன்முறை இந்த பரத கண்டத்தை சூறையாடும். நான்துறவியாகி, சுபத்திரை பித்து பிடித்து அலைவதைவிட நான் அழிந்து என் குடும்பம் அழிவதைவிட சுபத்திரையை அடைவது எப்படி என்று யோசிக்க வேண்டும்.

நான் தீர்த்த யாத்திரை போன பலனைப் பார். எல்லா நதிகளிலும் நீராடிவிட்டு வந்த புண்ணியத்தைப் பார். ஏகாந்தியாய் திரிந்ததன் விளைவைப் பார். ரைவ பர்வதத்திற்குக் கீழ் எனக்கு நானே பைத்தியம் போல் பேசிக்கொண்டிருக்கிறேன். அர்ஜுனன் நொந்தான் அயர்ந்தான். அயர்ச்சியில் கிருஷ்ணா என்றான். சுபத்திரையைக் கொஞ்சம் மறந்து கிருஷ்ணனைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.

கிருஷ்ணனைக் ‘கடவுள்’ என்று அம்மா சொல்கிறாள். ‘தர்மத்தைக் காக்க வந்த தலைவன்’ என்று அண்ணா யுதிஷ்டிரர் சொல்கிறார். ‘அதிசயமான பிறவி’ என்று பீமன்



சொல்கிறான். ‘சகலமும் தெரிந்த ஞானி நமக்காய் அரசவேடம் பூண்டுள்ளார்’ என்று நகுலன் சொல்கிறான். சகாதேவன் ஒன்றுமே சொல்வதில்லை. கிருஷ்ணனை ‘அது’ என்கிறான்.

‘‘அது வந்திருக்கிறதோ விருந்துக்கு, அமரச் சொல். நான் என் வேலைகளை முடித்துவிட்டு அதை வந்து பார்க்கிறேன்’’ என்று அலட்சியமாய் பேசுகிறான். அர்ஜுனனுக்கு அது அலட்சியமாய் இல்லை. ஆரத்தழுவிக் கொள்ளும் உபசரிப்பில் கிருஷ்ணனும் சகாதேவனும் மெய்மறந்து போகிறார்கள்.

சகாதேவனுக்கென்று தனியாக ஒரு புன்முறுவல்.

சகாதேவனுக்கென்று தனியாக ஒரு ஆசீர்வாதம். என்ன பேசி முடித்தாலும் சகாதேவனை கடைசியாக ஒரு பார்வை பிறர் அறியாவண்ணம் கிருஷ்ணனால் சகாதேவனுக்கு கொடுக்கப்படுகிறது. சகாதேவன் அபிப்பிராயம் கேட்காமல் கிருஷ்ணன் எந்தக் கேள்வியையும் முடிப்பதில்லை.

ஒரு வேளை சகாதேவனுக்கு கிருஷ்ணன் கடவுளோ? அதனால்தான் அது என்று பிரமாண்டமாய் குறிப்பிடுகிறானோ. மிக்க மரியாதையுடன் விலகி நிற்கிறானோ. ஆனால், தனக்கு அப்படியில்லையே. கண்ணனோடு தோள் உரச குதிரைகள் ஓட்டுவதும், ஒரே தேரில் புஜம் பற்றிப் போவதும், விளையாட்டுப் பயிற்சிகளில் மூச்சு முட்ட மோதிக்கொள்வதும் நிகழ்ந்திருக்கிறதே. கடவுள் என்பவரோடு மூச்சு முட்ட போரிட முடியுமோ.

‘அர்ஜுனா! ஒரு பந்தயம். இடுப்பில் வைத்திருக்கும் என் வலக்கை வளையூடே உன் அம்பு போய் அந்த மரத்தின் உச்சியிலிருக்கிற கனியை சேதாரமில்லாமல் பறித்து என் காலடியில் அப்பழத்தைப் போட்டு மறுபடியும் என் கை

வழியே உன் அம்பு வரவேண்டும். முடியுமோ உன்னால்?'' கிருஷ்ணன் கண்சிமிட்டுவான். அர்ஜுனன் அதற்காக அம்பு தேர்ந்தெடுத்து, அந்த அளவுக்காய் வில் வளைத்து பாணம் விட்டுப் பழம் கொய்து காலடியில் அனுப்பி திரும்பி கைவளைவு வழியே வந்த பாணத்தை சட்டென்று பறித்து நிறுத்துவான்.

இப்படி இதற்குமுன் எய்ததில்லையே, தர்மர் வியப்பார்; எவரும் கேட்டதில்லை. அர்ஜுனன் சொல்வான்.

''இப்படி எய்ய வேண்டுமென்று உனக்கு எப்படி தோன்றியது?''

கிருஷ்ணனைக் கேட்பார்.

''என் அர்ஜுனனுக்கு எல்லாம் முடியும். இது செய், அது செய் என்று அவனை ஊக்கப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.''

கிருஷ்ணன் வாஞ்சையுடன், அர்ஜுனன் கைகளைப் பிடித்துக் கொள்வான். அப்போதுதான் புரிந்தது. எதையும் செய்ய அர்ஜுனனுக்குத் தெரியும். எதை எப்போது செய்வதென்று கிருஷ்ணனுக்குத்தான் தெரியும்.

சுபத்திரை வேண்டுமென்ற ஆசைதான் அர்ஜுனனுக்கு வரும். அவளை, எப்படி, எப்போது அடைவது என்பது கிருஷ்ணனுக்குத்தான் தெரியும்.

''கிருஷ்ணா, என் ஸ்நேக ராஜனே, சகலமும் அறிந்த சாந்தனே, எனக்கு உதவி செய். ஆசை வாய்ப்பட்டு அலைகிறேன். என்னை அமைதிப்படுத்து. உன் தங்கை சுபத்திரையை நேசிக்கிறேன். அவளை எனக்குத் திருமணம் செய்து கொடு. எவரும் குளிக்காத புனல் எங்கோ இருக்கிறதென்று சொன்னால் அதை விழைவது என்



இயல்பு. விழைந்தேன். பொங்கும் புனலையும் கண்டேன். குளித்து என்னைக் குளுமையாக்கிக்கொள்ள வேண்டும் கண்ணா. எனக்கு உதவி செய். மலைச் சரிவிலிறங்கி ஓடும் மதயானை போல் என் உள்ளம் அவளை நோக்கி ஓடுகிறது. அவளுக்கு என்றென்றும் நல்ல காதலனாய் இருப்பேன். காண்டீபம் கொணர்ந்து யாதவ குலத்தை துரத்தி உன் தங்கையைக் கவர என்னால் முடியும். உன்னை எப்படித் துரத்துவது? என்னுள்ளே எப்பொழுதும் சிரித்துக் கொண்டிருக்கிற உன்னை எப்படித் துரத்துவது? உன் அன்பையே ருசித்துக் கொண்டிருந்த நான் உன் கோபத்திற்கு ஆளாவேனோ என்று பயப்படுறேன். நீ என்னை வெறுத்துவிடக் கூடாதென்று அஞ்சுகிறேன்.

கிருஷ்ணா, உன்னைக் 'கடவுள்' என்று சொல்கிறார்கள். நீ கடவுளா? எனக்குத் தெரியவில்லை. உன்னை 'தர்மத்தின் தலைவன்' என்று சொல்கிறார்கள்... 'ஞானியான நீ காமியான என்னை ஏன் ஸ்நேகம் கொண்டாய்?' என்று கேள்வி வருகிறது.

உன்னை 'அது' என்கிறான் சகாதேவன். நீ எது? எல்லாம் கடந்த, எல்லாமுமாய் இருக்கின்ற, எந்தச் சலனமுமில்லாத, எந்த மாயையிலும் சிக்காத அதுவா நீ. நீ அதுவானால் நான் 'இது' வேண்டுமென்று எப்படிக் கேட்பது. நான், நீ, அவன், அவள் என்று எப்படி பிரிப்பது. கிருஷ்ணா! எனக்கு நீ 'அது' இல்லை. எல்லாம் அறிந்த ஞானியில்லை. அதிசய பிறவியில்லை. என்னிலும் மேலான தர்மத் தலைவனில்லை. எல்லோரும் வணங்கும் கடவுளில்லை. நீ எனக்கு ஸ்நேகன், என் ஆருயிர்த் தோழன். என் விருப்பு வெறுப்புகளில் கலந்து, என் நலனையும் உன் நலனாய் யோசிக்கும் நண்பன். பூமிநாதா, என் ஸ்வாமி நாதா, வேணுகான தேவனே– இச்சையைத் தீர்க்கும் ஒரே

வழி இச்சித்தத்தை அடைவது அல்லவா. நான் இச்சித்தது எதுவாயினும் அதை அடையச் செய்து என் இச்சையைத் தீர்ப்பாய். இந்த இச்சை தீராமல் என் கை காண்டிபம் தூக்குமோ... என் கரம்; சரம் தொடுக்குமோ... என்னால் போர் செய்ய முடியுமோ... போரில்லாத அர்ஜுனன் உண்டோ... அர்ஜுனன் அழிய நீ விடுவாயோ... கிருஷ்ணா, என் ஸ்நேகனே! இந்த ரைவ பர்வதத்தின் அடியில் உனக்காய் தவிக்கிறேன். எனக்கு உதவி செய். என் உயிர்த் தோழனே, என்னைக் காப்பாற்று.''

அர்ஜுனனுக்குள்ளே ஓலப் பொங்கியது. அவன் உள்ளே ஒடுங்கி அமர்ந்தான். இடைவிடாது கிருஷ்ணனை தியானித்தான்.

அங்கே வெகு தொலைவில் துவாரகையில் கிருஷ்ணன் எந்தக் காரணமுமின்றி சிரித்தான்.

## 2

ஆச்சார்யர் துரோணர் சொல்லிக் கொடுத்த வித்தை இது. புலன்களின் தாபம் மறந்து மனசை ஒருமுகப்படுத்தி உள்ளுக்குள்ளே உரக்க குரலெடுத்து, எவரின் வரவை வேண்டி விழைகிறோமோ அவரை அழைத்தால் அழைக்கப் பட்டவர் உள்ளுக்குள்ளே சிலிர்ப்பெடுத்து யாரோ அழைக்கிறார்கள் என்று நினைப்பெடுத்து அழைத்தவரைத் தேடி வரக்கூடும். அழைத்தவருக்கும் அழைக்கப் பட்டவருக்கும் இடையேயுள்ள இறுக்கம் முக்கியம்.

துவாரகையை விட்டு கிருஷ்ணன் வெளியே வந்தான். இரட்டை குதிரை பூட்டிய தேரில் ஏறிக் கொண்டு,



மேலாடை பறக்க ரைவ பர்வதம் நோக்கி குதிரையைச் செலுத்தினான். ''பின்னால் படைகளை தொடர்ந்து வரச் செய்யட்டுமா?'' யாதவ படைத் தளபதி கேட்டார்.

''வேண்டாம்...''

''ரகசியமான வேலையா? நான் மட்டும் துணைக்கு வரட்டுமா?''

''தேவையில்லை.''

''சற்று விலகி காவலாக வருகிறேனே...''

''அவசியமில்லை தளபதி. எங்கும் எந்த ஆபத்தும் இல்லை. என்னை யாரோ விரும்பி அழைக்கிறார்கள். யாரென்று பார்த்துவரப் போகிறேன்.''

குதிரைகள் கோட்டைக் கதவு தாண்டி, துவாரகை நகரைத் தாண்டி துரிதமாய் அர்ஜுனன் கண்மூடியிருக்கும் இடம் நோக்கி வந்தன.

அழகன்; கம்பீரன்; தாமிரச் சிலைபோல உறுதியான உடலை உடையவன், விரதமேற்று மெலிந்திருந்தாலும் உடம்பின் வன்மை கூடியிருக்கிறது. அங்கங்கே தியானத்தில் ஆழ்ந்து, விழியின் ஓரங்கள் கூர்மையாகி மேல்நோக்கித் திரும்பியிருக்கின்றன. அவன் இறுக்காமலேயே உதடு இறுகியிருக்கிறது. காதுகள் தலையை ஒட்டியிராமல் அகன்றிருக்கின்றன. முகவாயின் பலம் கூடியிருக்கிறது. நெற்றியின் கோடுகள் ஆழ்ந்து உள்ளிறங்கும் பயிற்சியைக் காட்டுகின்றன. சிகை மெல்லியதாய் நீண்டு வழிந்து நுனியில் சுருண்டிருக்கின்றன. ரோமத்தின் அடர்த்தியில் இவன் பௌருஷத்தின் கனம் தெரிகிறது. மூக்கு கூர்மையாகி, மூக்கு மடல்கள் விடைத்திருக்கின்றன. லயம் தவறாத மூச்சுப் பயிற்சியை அவை காட்டுகின்றன.

அளவான, கண்கள் சரிந்த தோள்கள், அகலமான மார்படம், குறுகிய இடுப்பு, குழிந்த வயிறு, நீண்ட தொடைகள், உருண்டையான மூட்டுகள். உறுதியான முழங்கால். அகன்ற பாதம், நீண்ட விரல்கள் எல்லாம் சரியாக இருக்கின்றன. ஆனால், உடம்பு சுற்றி நீலவர்ணம் மின்னுகிறது. நீலத்திற்குக் கீழே வெண்சிகப்பு வட்டம் ஒளிர்கிறது. நீலம் துக்கம், வெளிர் சிகப்பு காமம். என் நண்பன் அர்ஜுனன் காமத்தால் துக்கப்பட்டிருக்கிறான்.

''இவன் காமத்திற்கு யார் காரணம்?'' அர்ஜுனனின் ஹிருதயம் துளைத்து நோக்க, அந்த மனசின் கிருஷ்ண உச்சரிப்புக்குக் கீழே சுபத்திரை தெரிந்தாள்.

''எனக்கு சம்மதம் அர்ஜுனா. வலுவும், வெல்ல முடியாத வீரமும், விவேகமும், செயற்கரியவற்றை செய்து முடிக்கும் ஆற்றலும் உடைய உன்னை என் தங்கைக்கு மணம் முடிக்க எனக்கு முற்றிலும் சம்மதம். விவேகமுள்ள வீரர்களை எல்லாப் பெண்களும் விரும்புவார்கள். சுபத்திரை உன்னை விரும்புவாள் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால், என்றோ ஒரு நாள் அரசவையில் சுபத்திரையைப் பார்த்துவிட்டு, இப்படி ஏங்குதிறாயே, இந்த ஏக்கத்தைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். இது காதலா... கவர்ச்சியா என்பதைச் சோதிக்க வேண்டும். உறவாக்கிக் கொள்வதில் எனக்கு விருப்பம் நண்பனே. நீ எனக்கு வேண்டும். உன் வில் எனக்கு வேண்டும். நான் சுட்டிக் காட்டும் இடத்தில் உன் காண்டீபம் வளைந்து சரம் பொழிய வேண்டும். இந்த பூமியை க்ஷத்ரியர் சுகிக்கிறார்கள். இந்த பூமி எல்லோருக்கும் பொது. எல்லோரும் இன்புற்றிருக்கவே படைக்கப்பட்ட விஷயம். இந்த பூமியில் தர்மத்திற்கே முன்னிலை. தர்மத்தின் பொருட்டே நட்பும் பகையும். தர்மத்தைக் காக்கவே அமைதியும்,



வன்முறையும். தர்மம் எல்லோருக்கும் பொது. நான் தர்மத்தின் தலைவனல்ல. நான் வேறு, தர்மம் வேறல்ல. நானே தர்மம். தர்மத்தைக் காக்க தர்மம் அதர்மமும் செய்யும். அந்த அதர்மமும் தர்மம். வலுவுள்ளவன் தர்மம் காப்பான். க்ஷத்ரியன் திமிராய் மாறினால் இன்னொரு க்ஷத்ரியன் அவன் திமிரை அழிப்பான். அதர்மம் வளர்வது தர்மத்தின் சிறப்பை வலியுறுத்தவே. வெயிலில்லாமல் நிழலருமை எப்படித் தெரியும். எங்கும் குளுமை இருப்பின் நிழ்லுக்கு என்ன பெருமை. அர்ஜுனா, குந்தியின் மைந்தனே, கண்ணைத் திற, எழுந்து நில்.''

கண்ணன் தன் மனதை அர்ஜுனன்மீது செலுத்த, அர்ஜுனன் மெல்லக் கண் திறந்தான். எதிரே கண்ணன் சிரிப்போடு நிற்பதைப் பார்த்தான்.

''கண்ணா!'' உரத்த குரலோடு வாடைக் காற்று மழையைத் தழுவிக்கொள்வது போலப் பாய்ந்து வந்து கண்ணனை இறுகத் தழுவினான்.

''என்ன இது அர்ஜுனா, இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய். விரதமெடுத்து தீர்த்த யாத்திரை போனதாய் கேள்விப்பட்டேன். ரைவ பர்வதம்தானா யாத்திரை?

இங்குள்ள மடுவில்தானா புண்ணிய ஸ்நானம்? தென்திசை நோக்கியல்லவா போனாய் என்று சொன்னார்கள். வழி தவறி மேற்குப் பக்கம் வந்துவிட்டாயா? அல்லது என்னிடம் சொல்லிட்டு இனிமேல்தான் தீர்த்த யாத்திரையா? நகருக்குள் வரக்கூடாதா, துறவாடை தரித்துக் கொண்டு இங்கு உட்கார்ந்திருந்தால் எப்படி? ருக்மணி துளசிக்கன்றுகள் வேண்டுமென்று சொன்னாள். சரி, தேடி எடுத்து வரலாமென்றால் நீ உட்கார்ந்திருக்கிறாய். உனக்கு மங்களமுண்டாகட்டும். உன் தீர்த்த யாத்திரை நல்லபடி

முடியட்டும். உன் விரதத்தின் மேன்மை உன்னை உயர்த்தட்டும். தொடர்ந்து துறவாடை உடுத்தி, மனசு அடக்கி...''

''கண்ணா!'' கிருஷ்ணன் முடிக்குமுன் அர்ஜுனன் அலறினான்.

''முடிந்துவிட்டது.''

''எது?''

''தீர்த்த யாத்திரை.''

''எப்போது...?''

''குமரி முனையில் இரண்டு கடல்களும் சங்கமித்ததைக் கண்டபோது.''

''என்ன இது, குமரிமுனை வரையில்தான் விரதமா. திரும்பி வரும்வரை காப்பாற்ற வேண்டாமா. முகம் வேறு வாடியிருக்கிறது. என்ன காரணம். விரதபங்கம் ஏதும் ஏற்பட்டுவிட்டதா. குமரிமுனையில் எவளையாவது கண்டு, மனசு மயங்கி விரதத்தை அங்கேயே முடித்துக் கொண்டாயா. அங்கே விஷயம் விபரீதமாகி விரட்டப் பட்டாயா. யார் உன்னை விரட்டியது. சொல் என்னிடம்.''

''அதொன்றுமில்லை.''

''எது இல்லை.''

''எந்த விபரீதமும், எந்தப் பெண்ணிடமும் நடக்கவில்லை.''

''அதுதானே பார்த்தேன். அர்ஜுனன் விரதத்திலிருந்து அணு அளவும் பிசகமாட்டான் என்று எனக்குத் தெரியுமே. வேண்டாமெனத் தீர்மானித்துவிட்டால் எப்பேர்ப்பட்ட அழகியும் அர்ஜுனனை மயக்க முடியாது என்பதை நான் அறிவேன்.''

''அப்படியில்லை கண்ணா...''



''எப்படியில்லை.''

''நீ சொல்வது போலில்லை.''

''யாரோ மயக்கியிருக்கிறார்களா. மனதில் மையல் உருவாகி அலைக்கழிக்கிறதா?''

''ஆமாம்...''

''யாரது?''

''ஒரு பெண்...''

''அடேய், உன்னைக் கவர்ந்தது மிருகமா என்றா கேட்டேன். உன்னிடம் உள்ள பெரிய குறையே பெண்ணாசைதானே. வில் வித்தையில் எத்தனை தேர்ந்தாலென்ன? அர்ஜுனன் பெண் பலவீனன் என்பது உலகம் அறிந்த விஷயமாயிற்றே...''

''பலவீனமாய்த்தான் போய்விட்டது.''

''பலவீனத்தைப் போக்கு.''

''எப்படி?''

''மறந்துவிடு. அப்படி ஒரு பெண்ணே இல்லை என்று கற்பிதம் செய்து கொள்.''

''கண்ணால் கண்டதை கற்பிதமென்று எப்படிக் கொள்ள முடியும்.''

''கடினம்தான். எனக்குக் கிட்டாது என்று மனசை சமனப்படுத்திக் கொள்.''

''அர்ஜுனனுக்கு கிட்டாத பொருள் ஒன்று உண்டோ? அர்ஜுனன் நினைத்தால் முடியாதது என்று ஒரு பொருள் உண்டோ? பிறகு என் காண்டீபத்திற்கு என்ன அர்த்தம். எனக்கு ஏன் அந்த வில். எனக்கெதற்கு அம்புறாத்துணி, என்னிடம் ஏன் வில் வித்தை, எனக்கு ஏன் ஒரு குரு. எனக்கெதற்கு ஒரு அரசவை. எனக்கெதற்கு ஒரு ராஜ்ஜியம்.

நான் ஏன் இங்கு க்ஷத்திரியனாய் பிறக்க வேண்டும். புல்லும் நூலும், சுவடியும் எடுத்து அந்தணனாய் அலையலாமே...''

''என்ன இது அர்ஜுனா, ஏன் இப்படி வெறுத்துக் கொள்கிறாய்? எதன் பொருட்டு வெறுப்பின் உச்சிக்கு போய்விட்டாய்; எதற்காக உலகம் உன்னைப் பாராட்டுகிறதோ அதையே நீ இழித்துப் பேசும்படி என்ன நேர்ந்துவிட்டது. எனக்கு தெளிவாகச் சொல். யார் அந்தப் பெண்?''

''பெயர் சொல்ல பயமாய் இருக்கிறது.''

''தேவர் குலமோ?''

''இல்லை...''

''கந்தர்வியோ?''

''இல்லை.''

''மானிடப் பெண்தானே, பிறகு அச்சமென்ன? உன்னைப் போல் வீரனுக்கு பெண் கொடுக்க யார் தயங்கு வார்கள்?''

''எல்லோரும், எல்லோரையும் மதிப்பதில்லை.''

''உண்மையாகவா?''

''சில சமயம் அப்படி நேர்வதுண்டு.''

''எதனால் அப்படி நேரும்?''

''நீ சொன்னதுபோல் இங்கே எனக்கு கெட்ட பெயர் உண்டு.''

''என்ன கெட்ட பெயர்.''

''உன் வாயால்தான் சொன்னாயே, மறுபடி நானும் சொல்ல வேண்டுமோ...''

''மறந்துவிட்டது அர்ஜுனா. நான் என்ன சொன்னேன்?'' கிருஷ்ணன் நடித்தான்.

''எனக்கு சற்று பெண்ணாசை அதிகம்தான்.''



''ஊர் அப்படிச் சொல்கிறது.''

''ஊர் சொல்வதில் உண்மை இருக்கிறது.''

''சரி, இதில் பெரிய தவறேதும் இல்லையே. உன்னைப் போன்ற உணர்ச்சிவசப்பட்டவர்களிடம் பெண்ணாசை சற்று தூக்கலாகத்தான் இருக்கும். மனதை ஒருமுகப்படுத்தி மாற்று வழியில் செலுத்தினாயானால் செயற்கரிய காரியங்களைச் செய்ய முடியும். பதட்டம் குறைந்தால் பக்குவம் அதிகமாகும்.''

''அதன் பொருட்டுதான் தீர்த்த யாத்திரை போனேன்.''

''நானும், அதற்காகத்தான் போயிருப்பாய் என்று நினைத்தேன்.''

''மாறிவிட்டது.''

''எது?''

''மனது.''

''எங்கிருந்து...''

''விரதத்திலிருந்து பெண்ணிடம் திரும்பி விட்டது.''

''என்ன காரணம்.''

''ஒரு அளவுக்குமேல் விரதம் என்னால் காக்க முடிய வில்லை.''

''யார் காரணம்?''

''அந்தப் பெண்...''

''பேரழகியோ.''

''ஆமாம்.பேரழகி. தேவ கந்தர்வகுலப் பெண்கள் கூட அப்படி அழகாக இருக்க மாட்டார்கள்.''

''நல்ல வம்சமா?''

''அறிவும் அறனும் உடைய வம்சம்.''

''அவர்களுக்கு பெற்றோர்கள் உண்டா?''

''தமையன்மார்கள் கூட உண்டு.''

''சரி, உனக்காக நான் போய்க் கேட்டு வருகிறேன்.''

''நீ போக முடியாது கண்ணா.''

''ஏன் போக முடியாது?''

''உனக்கு தர்மசங்கடம் ஏற்படும்.''

''என் தர்மத்திற்கு சங்கடமா? இதுவரை அப்படி நிகழ்ந்ததில்லையே...''

''என்னால் உனக்கு அப்படி நிகழக்கூடும். உன்னை அவ்வித சங்கடத்தில் ஆழ்த்த எனக்கு விருப்பமில்லை.''

''சரி. நான் வரவில்லை, நீயாகப் போய் பெண் கேட்கலாமே.''

''கொஞ்சம் முரட்டு இடம்.''

''பெண் வீடா?''

''ஆமாம்.''

''அறிவும் அறனும் உடைய வீடு என்று சொன்னாய்.''

''அறமுடையவர்கள்தான். ஆனால், என்னிடம் முரட்டுத்தனமாய் இருப்பார்களோ என்று பயமாய் இருக்கிறது.''

''நீ யாரைச் சொல்கிறாய் என்றே தெரியவில்லையே.''

''உனக்குத் தெரியும் கண்ணா. தெரிந்துகொண்டே என்னைச் சோதித்துப் பார்க்கிறாய்.''

''அர்ஜுனா! நீ என் நண்பன். நான் உன்னை சோதிப்பேனா?''

''நீ சோதனைக்குட்படுத்தாத ஆட்கள் உண்டா.''

''என்னை அதிகம் புகழ்கிறாய். நான் ஒரு சாதாரண யாதவன். மாடு மேய்க்கும் மனிதன்.''



'''இல்லை' என்று அம்மா சொல்கிறாள். உன்னைக் 'கடவுள்' என்று நினைக்கிறாள்.''

''யார் குந்தி தேவியா? உன் தாய் இருக்கும் திசைக்கு என் நமஸ்தாரங்கள்.'' குனிந்து கண்ணன் கைகுவித்தான்.

''என் அண்ணனோ உன்னை தர்மம் காக்க வந்தவர் என்கிறார்.''

''என் மாடு கன்றுகளை நான் ஒழுங்காகக் காப்பாற்றினால் போதாதா?''

''பீமன் உன்னை 'அதிசயபிறவி' என்கிறான்.''

''எல்லாப் பிறவிகளும் அதிசயம்தான்.''

''நகுலன் உன்னை 'ஞானி' என்கிறான்.''

''நகுலன் ஞானி. ஞானிக்கு யாரைப் பார்த்தாலும் ஞானியாகத்தான் தெரியும். அவர்கள் இயல்பு அது.''

''சகாதேவன் உன்னை 'அது' என்கிறான்?''

''எது?''

''எல்லாம் கடத்த 'அது'வாம். சலனமற்ற பரப்ரும்மமாம் நீ.''

''வேதங்கள் அப்படித்தான் சொல்கின்றன அர்ஜுனா! பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தும் 'பிரும்ம சொரூபம்' என்று சொல்கின்றன. சகாதேவன் எங்கோ படித்துவிட்டு என்னைச் சொல்கிறான். அதிருக்கட்டும். உனக்கு, உனக்கு நான் யார்? யார்?''

''தெரியவில்லை கண்ணா.''

''என்ன தெரியவில்லை.''

''நீ யார் என்று தெரியவில்லை. உன் நட்பில் ஏன் மயங்கிக் கிடக்கிறேன் என்று தெரியவில்லை. எல்லா இடத்திலும் உன்னையே ஏன் நினைக்கிறேன் என்று புரியவில்லை.''

''எல்லா இடத்திலும் என்னை நினைக்கிறாயா, எப்படி?''

''பாய்ந்தோடும் ஆற்றைப் பார்த்தால் கிருஷ்ணனோடு இதில் குளிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. சுருண்டு மோதும் சமுத்திரத்தைப் பார்த்தால் கிருஷ்ணனோடு இதைக் கடக்கவேண்டுமென்று தோன்றுகிறது. உயர்ந்த விந்திய பர்வதத்தில் ஏறும்போது உன்னோடு அங்கு கைகோத்து உலவ வேண்டும் என்று தோன்றுகிறது. மனது அமைதியாக இருக்கும்போது உன்னை நினைக்கிறது. பதட்டப்படும் போது உன் உதவியைக் கோருகிறது. நீ யார், எனக்கேன் உன் நினைப்பு சதாகாலமும், எதன் பொருட்டு நான் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் புரியவில்லை. நீ நல்லவனா, கெட்டவனா என்று தெரியவேயில்லை. நீ நண்பனா எதிரியா என்று புரியவில்லை.''

''எதிரியை வீரர்கள் மறக்க மாட்டார்கள் என்பது உண்மைதான்.''

''நீ என் எதிரியில்லை கண்ணா. உன்னை எதிர்க்க எனக்கு பயமாக இருக்கிறது.''

''எல்லாம் கிடக்க என்னை ஏன் நீ எதிர்க்க வேண்டும்? நான் எதிர்க்கும்படி நீ என்ன செய்து விட்டாய்?''

''செய்தால் எதிர்ப்பாயோ என்கிற பயம்.''

செய்யக் கூடாத செயலா?''

''அப்படித் தெரியவில்லை. ஒரு பெண் மீது ஒரு ஆண் இச்சைப்படுவது இயல்பு. இயற்கை.''

''உண்மைதான். ஒருவேளை அவள் திருமணமான பெண்ணாக இருந்தால்...''

''சீச்சீ... பிறன்மனை நோக்கும் பாவியல்ல நான். அவள் கன்னிகை.''



''கன்னிகையெனில் சரி. ஒருவேளை அவள் உன்னை விரும்பாதிருந்தால்...''

''விரும்புவாள் என்று தோன்றுகிறது. வீரர்களை ராஜகுமாரிகள் நேசிப்பது வழக்கம்தான்.''

''வழக்கம்தான். அவள் உன்னை விரும்புகிறாளா என்பதைத் தெரிந்து கொண்டாயா?''

''இல்லை.''

''அவள் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே விரும்புகிறாயா?''

''உண்மை.''

''இது ஒருதலைக் காதல்.''

''ஆனால், உண்மையான காதல்.''

''உண்மையான காதலென்று எப்படிச் சொல்கிறாய் அர்ஜுனா? இரண்டு கை தட்டினால்தானே ஓசை.''

''ஒரு கை அசைவிலும் ஓசை வரும். உணர்ச்சி உள்ளவர்களுக்குப் புரியும்.''

''எனக்கு புரியவில்லை. என்ன, எங்கே, யார் அவள் என்று தெரியாமல் நான் மேற்கொண்டு பேசுவதாக இல்லை.''

''கண்ணா!'' அர்ஜுனன், கிருஷ்ணனின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''யாரவள், யாரவள்? அர்ஜுனா?''

''யாதவகுல இளவரசி. பலராமனுக்கும், கிருஷ்ணனுக்கும் தங்கையாகப் பிறந்தவள். மானுடருள் ஈடில்லாத பேரழகி, என் சுபத்திரை அவள்.''

''என்ன?'' கண்ணன் பொய்ச்சினம் காட்டினான்.

''எனக்கு அவள் வேண்டும் கண்ணா, அவளை நான் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். உன் தங்கையை எனக்குத் திருமணம் செய்து கொடு கண்ணா.''

''பலராமன் காதுகளுக்கு விஷயம் எட்டினால் தொலைந்தாய். 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் யாதவ குலத்தையே கடிக்க வந்து விட்டாயா?' என்று சீறுவார்கள்.''

''பலராமர் சீற்றம் எனக்கு ஒரு பொருட்டில்லை.''

''யாதவர்களுக்குப் பயப்படுகிறாயா?''

''உன் யாதவ குலத்தையே ஓட ஓட விரட்டியடிக்க என்னால் முடியும்.''

''நான் அங்கே இருக்கும்போது இது அத்தனை சுலபமில்லை.

''அதுதான் பயம்.''

''எது?''

''உன்னோடு போரிடுவது.''

''உலகத்தின் மிகச் சிறந்த வில்லாளி இந்த இடையனுக்கு பயப்படுகிறான் என்று கொள்ளலாமா?'' கண்ணன் கண் சிமிட்டினான்.

''நீ வெறும் இடையனெனில் இங்கு நடப்பதே வேறு.'' அர்ஜுனன் கைகள் மீசையைத் துடைத்துக் கொண்டன.

''நான் யாராய் இருக்கிறேன் உனக்கு.''

''அதுதான் தெரியவில்லை. எனக்கு நீ நல்ல நண்பன் என்று மனசு ஏற்றாலும் உள்ளே உன்னைக் குறித்து ஒரு பயம் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது. மற்றவர்கள் உன்னைப் புகழ்வது உன்னைக் குறித்து எனக்குள்



கலவரத்தை ஏற்படுத்துகிறது. உன்னோடு பழகுவதில் ஒரு எச்சரிக்கை வந்து விடுகிறது. சுபத்திரையைக் காதலிப்பது பிடிக்காதோ என்ற பயம் ஏற்படுகிறது.''

''எனக்குப் பிடித்தாலென்ன, பிடிக்காது போனாலென்ன.''

''உனக்குப் பிடிக்காதது எனக்கும் பிடிக்காது. என் நண்பனின் மனசு நோகும்படி ஒரு காரியத்தை எல்லாம் செய்ய இயலாது. கண்ணன் வருத்தப்படுகிறான் என்றால் என்னால் அந்த காரியத்தை செய்ய முடியாது.''

'ஆக பிரச்சினை இதுதான், உனக்கு சுபத்திரையின் மீது விருப்பம் வந்துவிட்டது. உன் விருப்பம் எனக்கு விருப்பமா என்று யோசிக்கிறாய்.''

''ஆமாம்...''

''எனக்கு விருப்பமில்லையெனில்...''

''இங்கேயே கல்லால் சிரசை மோதிக் கொண்டு இறந்துவிடுவேன்.''

''அடேய்!'' கிருஷ்ணன் பதறினான்.

''நான் விரும்பிய சுபத்திரை கிடைக்காதபோது நான் உயிர் வாழமாட்டேன்.''

''அர்ஜுனா.''

''விருப்பத்தை உள்ளே வைத்துக் கொண்டு வெறுமே வெளியே திரிந்தால் எனக்கு வெறுப்புதான் ஏற்படும். வெறுப்புடன் எப்படி உயிர் வாழ முடியும்.''

''நிறைவேறும் விருப்பமாக அல்லவா கொள்ள வேண்டும்.''

''நீ என் பக்கம் இருக்கும்போது நிறைவேற என்ன தடை.''

''நான் உன் பக்கமிருக்கிறேன் என்று ... சொன்னார்கள் உனக்கு.''

''அப்போது இத்தனை கால நட்பு பொய்யா, உன் நண்பன் உயிர்வதைப் பட்டுக் கொண்டிருக்கும்போது நகைத்து சிரிப்பாயா?''

''நகைக்க முடியாது.''

''பிறகு...?''

''வேண்டாம் இந்த விருப்பம். விபரீதம் ஏற்படும் என்று விளக்கிச் சொல்லலாம்.''

''உன் விளக்கம் தேவையில்லை எனக்கு.''

''சுபத்திரை மீது அத்தனை விருப்பமோ?''

''ஆமாம்.''

''அந்த விருப்பம் நிறவேற எது வேண்டுமானாலும் செய்வாயோ?''

''செய்வேன்.''

''என்னோடு போர்புரிய நேர்ந்தால்?''

''அது வேதனை கண்ணா, ஆனால்...?'' அர்ஜுனன் துக்கித்து தலை குனிந்தான்.

''என்ன ஆனால்?'' கிருஷ்ணன் தூண்டினான்.

''இதன் பொருட்டு உன்னை எதிர்க்க வேண்டுமானாலும் எதிர்ப்பேன். எதிர்ப்பேன். எதிர்த்து உன் கையால் அழிய வேண்டுமானாலும் அழிவேன்.''

''நீ உலகத்தில் சிறந்த வில் வீரன். விஜயன்.''

''இல்லை கண்ணா, உன் எதிரே நான் விஜயனில்லை. நீ என் எதிரே நிற்கும்போது, நான் குந்தியின் மைந்தன். அர்ஜுனன். உன்னை வெற்றிகொள்ள என்னால் முடியாது.''



''காரணம்?''

''உன் நட்பு கொடுத்த மயக்கம்.''

''போர் என்று வந்த பிறகு நட்பாவது, உறவாவது.''

''அத்தனை வெறியனல்ல நான். பலராமனைக் கொன்று, யாதவர்களைத் துன்புறுத்தி, சுபத்திரையை அடைந்தால் நான் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? பலராமரைக் கொன்ற துக்கம் அதிகரிக்குமே தவிர, நான் பலராமரைக் கொன்றுவிட்டேன் என்ற கோபம்தான் சுபத்திரைக்கு இருக்குமே தவிர, அந்த வாழ்க்கையில் சுவை இருக்குமா, உறவையும் நட்பையும் ஒழித்துக் கட்டவா வில்வித்தை கற்றோம்.''

''கௌரவர்கள் உனக்கு உறவுதான். சகோதரர்கள் தான். என்ன ஒற்றுமை வாழ்ந்துவிட்டது.''

''ஹா... அவர்கள் அதர்மத்தின் சின்னங்கள்; கொடியவர்கள்; சூழ்ச்சிக்காரர்கள்; எதற்கும் அஞ்சாதவர்கள்; நயவஞ்சகர்கள்.''

''ஆக உன்னால் அதர்மத்தை எதிர்க்க முடியுமே தவிர, தர்மத்தை எதிர்க்க முடியாது என்கிறாய்.''

''உண்மை.''

''பலராமனை எதிர்ப்பது தர்மத்தை எதிர்ப்பது என்கிறாய்...''

''உண்மை...''

''அதே சமயம் சுபத்திரையையும் மனசார விரும்புகிறாய்...''

''ஆமாம். கண்ணா, உயிருக்குயிராய் நேசிக்கிறேன். அவளை அடைய எனக்கு வழி சொல். தயவுசெய்து எனக்கு உதவி செய்.''

‘‘நல்ல விரதமப்பா நீ இருந்தது. கங்கையில் குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டு வந்த கதையாக அல்லவா இருக்கிறது. புண்ணிய நதிகளில் நீராடி பெண்ணாசையோடு வந்திருக்கிறாயே.’’

‘‘பெண்ணாசை. பெண்ணாசை என்று இகழ்வாகப் பேசாதே கண்ணா.’’

‘‘பிறகு என்ன இது?’’

‘‘காதல்...’’

‘‘கண்டதும் காதல்...’’

‘‘என்ன தவறு?’’

‘‘தவறொன்றுமில்லை...’’

‘‘அப்போது உதவி செய்...’’ அர்ஜுனன், கிருஷ்ணன் கைகளைப் பற்றிக் கொண்டான்.

‘‘செய்யலாம், பலராமரை நினைத்தால்...’’

‘‘உனக்கும் பயமா?’’

‘‘பயமில்லை. ஒரு மரியாதை. உன் மீது அவருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை.’’

‘‘நல்ல அபிப்பிராயம் வர, நான் என்ன செய்ய வேண்டும்...’’

‘‘இப்படியே துறவியாக இருந்துவிட வேண்டும்...’’

‘‘கண்ணா...’’ அர்ஜுனன் ஆத்திரத்தில் கத்தினான்.

‘‘சிறிது காலத்திற்கேனும் துறவி வேடம் போட்டே ஆகவேண்டும்.’’

‘‘சிறிது காலமெனில் எவ்வளவு காலம்.’’

‘‘காதல் கனியும் வரை.’’

‘‘என் காதல் காயாகவா இருக்கிறது.’’



‘‘ஆமாம். கனிய சிறிது காலம் ஆகும்.’’

‘‘உண்மையில் இது காதலா, காமமா என்று தெரியவேண்டும். கைக்கெட்டும் தூரத்தில் உன் காதலி இருப்பினும் அவளைக் கண்ணியமாக நீ நடத்துவாயா என்று நான் அறிய வேண்டும். சுபத்திரையோடு ஒரே அறையில் நீ தங்கினால் நீ அவளை விரட்டி வேதனைப்படுத்தாம விருப்பாயா என்று தெரியவேண்டும்.’’

‘‘கண்ணா... ஏன் என்னை அவ்வளவு மட்டமாக நினைக்கிறாய்?’’

‘‘உனக்கே உன்னைத் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். அவள் விருப்பம் தெரியாது. அவளை நீ விரட்டக் கூடாது என்பதற்காகச் சொன்னேன்.’’

‘‘அவளும் என்னை விரும்பினால்...’’

‘‘அந்த காதல் தர்மமாகும். பிறகு அதைத் தடுக்க எவராலும் முடியாது, ஏன் என்னாலும் இயலாது.’’

‘‘கண்ணா...’’ அர்ஜுனன் கை கூப்பினான்.

‘‘அவள் விரும்பாது போனால்...’’

‘‘விருப்பமில்லாத பெண்ணை வளைப்பது அதர்மம். பிறகு உன்னை எவரும் எதிர்க்க வேண்டாம். உன் அதர்மமே உன்னை அழிக்கும்.’’

‘‘புரிகிறது கண்ணா. அவள் விரும்புகிறாளா என்று தெரிந்துகொள்வேன். அவள் விரும்பும்படி நடந்து கொள்வேன்.’’ பரபரத்தான்.

‘‘ஆனால், சுபத்திரைக்கு வீரர்களைவிட துறவிகளைத் தான் பிடிக்கும். அவள் வளர்ப்பு அப்படி.’’

‘‘அதற்கு நான் என்ன செய்வது?’’

''துறவியாகவே இரு. அவள் மனசு மாறும் வரை இந்தத் துறவி வேடத்திலேயே இரு.''

''இது வேடமில்லை கண்ணா! நான் குமரி வரை தீர்த்த யாத்திரை போய் வந்திருக்கிறேன்.''

''அதனாலென்ன. இனி இது வேடம்தானே. அரிஜுனன் துறவியாக இருப்பதில் எனக்கும் விருப்பமில்லை. அர்ஜுனனின் வில் வித்தையைக் கண்டு நான் நண்பனானேனே தவிர தீர்த்த யாத்திரை செய்தவன் என்று ஸ்நேகமாகவில்லை. எவனாலும் வெற்றிகொள்ள முடியாத வீரனென்று விரும்பினேனே தவிர என் தங்கைக்கு எவனோ ஒருவன் கிடைத்தான் என்று சந்தோஷமாகவில்லை.''

''உன் தங்கை சுபத்திரையை எனக்கு மணம் முடிப்பதில் உனக்கு சம்மதம்தானா...?''

''உன் ஒழுக்கத்தைப் பொறுத்திருக்கிறது அது.''

''என் ஒழுக்கத்திற்கு என்ன குறை...''

''இது வரை இல்லை. இனி வரலாம்.''

''இனி சோதனை வரலாம்.''

''என்ன சோதனை, என்ன சோதனை வரும்...''

''க்ஷத்ரியன் வாக்கு தவறக்கூடாது.''

''தவறமாட்டேன்.''

''சத்தியமாய்...''

''உன் மீது சத்தியமாய் நான் வாக்குத் தவற மாட்டேன்.''

''எப்போதும் தவறக்கூடாது...''

''எது நேர்ந்தாலும் தவறமாட்டேன்.''

''சுபத்திரை விருப்பமில்லாமல் அவளைத் தொடக் கூடாது.''



''அவள் விருப்பம் தெரியாமல் என் விரல்கூட அவள் மீது படாது. ஒரு வேளை அவள் விரும்பினால்...''

''விரும்பியவர்களைச் சேர்த்து வைப்பது என் வேலை...''

''கண்ணா, உனக்கு எப்படி நன்றி சொல்வேன்.''

''கொடுத்த வாக்கை ஒருபோதும், ஒருகாலும் மீற மாட்டேன் என்ற கொள்கையைக் கொண்டால் போதும். எதன் பொருட்டும் உன்னை அண்டியவர்களைக் கைவிட மாட்டேன் என்று சொன்னால்போதும்.'' கிருஷ்ணன் உள்ளங்கை நீட்டினான். அர்ஜுனன் அவன் உள்ளங்கை மீது தன் உள்ளங்கையை வைத்தான். சுபத்திரையை மனதில் நினைத்துக் கொண்டான். கைவிடமாட்டேன் என்று சத்தியம் செய்தான். கிருஷ்ணன் வாய்விட்டுச் சிரித்தான். ரைவ பர்வதம் அதிர்ந்தது. இன்னொரு கதைக்கான வித்து, இன்னொரு சோதனைக்கான விதை அங்கே நடப்பட்டது.

''நானிருக்க பயமேன்'' கண்ணன், அர்ஜுனனை அணைத்துக் கொண்டான். அர்ஜுனன் மனது மணக்கோலம் பூண்டது. அந்தக் கணமே சுபத்திரையை மனைவியாய் வரித்துக் கொண்டது. கண்ணன் எழுதும் கதைக்கு கதாநாயகனாக நடிக்கத் தயாரானான்.

கண்ணனின் யோசனைப்படி ரைவ பர்வதத்தின் நடுப்பகுதிக்கு ஏறி அங்குள்ள ஒரு குகையில் பல நாட்கள் உணவின்றி தவம் செய்யும் துறவிபோல் கண்மூடி அமர்ந்து கொண்டான். அந்த ரைவ பர்வதத்தை யாதவர்கள் தங்களைக் காக்கும் எல்லை தெய்வமாக கருதி ஆண்டுதோறும் அதற்கு விழா எடுப்பார்கள்.வெகு சில நாட்களிலேயே அந்த ரைவ பர்வதம் நோக்கி, அவர்கள் சேனை, பரிவாரங்களோடு பலராமர் தலைமையில் நடந்து வந்தார்கள். மலை

ஏறினார்கள். கண்ணனும் ஏதுமறியாதவன் போல அவர்களுடன் கலந்துகொண்டான். அவர்களோடு யாதவ குலத்தோன்றல் சுபத்திரையும் வந்தாள். கண்மூடி அமர்ந்திருக்கும் அர்ஜுன சந்நியாசியைப் பார்த்துவிட்டு பலராமரிடம் அதைக் தெரிவிக்க ஓடினாள்

## 3

''ஒரு இளம் துறவி அண்ணா, நீண்ட காலம் கடுந்தவம் செய்திருப்பார் போலிருக்கிறது. சோர்ந்து போய் உணர்வின்றி அந்தக் குகையில் சாய்ந்து கிடக்கிறார். நாம் உடனே ஏதாவது செய்தாக வேண்டும். அவரைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. பார்க்கும்போதே அழுகை வந்து விட்டது.'' சுபத்திரை பரபரத்தாள். அவள் பரபரப்பைவிட வேகமாக பலராமர் அந்தக் குகை நோக்கி ஓடினார். துவண்டு கிடந்த அர்ஜுன சந்நியாசியை கைகளில் அள்ளிக் கொண்டு குகைவிட்டு வெளியே வந்தார்.

வாயில் குளிர்நீர் ஊற்றினார்கள். தயிர் சோறை மசித்துப் பிசைந்து குழிந்த வயிற்றில் தேய்த்து உணவுச் சத்தை நேரடியாய் வயிற்றில் இறக்கினார்கள். ஆடைகளைப் போர்த்தி உடம்பை உஷ்ணப்படுத்தினார்கள். பழரசம் புகட்டினார்கள்.

அர்ஜுன சந்நியாசி மெல்ல கண் விழித்தான்.

''நீங்கள் யார், எதற்கு என் தவத்தை கலைத்தீர்கள்.''

''துறவியே, நான் பலராமன். துவாரகையைச் சேர்ந்த யாதவர்களின் தலைவன். எங்கள் எல்லையான இந்த மலைமீது நீங்கள் இத்தனை கடுந்தவம் இயற்றினால் எங்கள்



தேசத்தில் மழையில்லாது போகும். உங்கள் உடல் வாடினால் எங்கள் கறவைகள் வாடும். உமக்கு ஏதாவது ஒன்று நேர்ந்தால் எங்கள் குலம் அழிந்து போகும். சாதுக்கள் நொய்மைப்பட ஒரு அரசன் பார்த்திருக்கலாகாது. என்னோடு என் நகரத்துக்கு நீங்கள் வரவேண்டும். என் அரண்மனையில் நீங்கள் தங்க வேண்டும்.'' பலராமர் கைகூப்பினார்.

''யாதவர்களின் அரசனே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். இல்லறத்தார் இருக்குமிடங்களில் துறவிகள் இருப்பது தர்மமில்லை. புருஷனும், மனைவியும் சேர்ந்து வாழும் இடங்களிலுள்ள வாசனை துறவிக்கு ஆகாது. நான் இங்குள்ள மலைக் குகையிலேயே மழைக்காலம் வரை தங்கியிருந்துவிட்டு பிறகு வேறு ஊருக்குப் போவேன். நீங்கள் என்னை அணைத்துக் கொண்டிருப்பதுகூட என்னை இம்சைப்படுத்துகிறது. என்னை தனியே விடும்படி தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன்.''

அர்ஜுன சந்நியாசி மெலிந்த குரலில் பேசினார்.

''தபஸ்வியே! உங்களை இப்படி விட்டுப் போக எனக்கு மனமில்லை. இல்லறத்தார் இல்லாத கன்னி மாடத்தில் நான் உங்களை தங்க வைக்கிறேன். என் தங்கை சுபத்திரையின் கன்னிமாடம் என் அரண்மனைக்கு அருகே இருக்கிறது. உங்களைக் கண்டுபிடித்த சுபத்திரையே உங்களுக்குப் பணிவிடை செய்வாள். தவத்தால் வாடி மெலிந்த நீர் அவள் உபசரிப்புகளை ஏற்றுக்கொண்டு அந்தக் கன்னி மாடத்திலேயே உமது தவத்தைத் தொடர்ந்து, என் தங்கையை ஆசீர்வதிக்க வேண்டும். உம்மை உபசரிக்கும் புண்ணியத்தால் அவளுக்கு நல்ல புருஷன் கிடைக்கட்டும். மறுப்பு சொல்லாது துவாரகைக்கு நீங்கள் வரவேண்டும்'' என்று பலராமர் பணிவோடு வேண்டினார்.

அர்ஜுன சந்நியாசி சம்மதத்துடன் கண்மூடிக் கொள்ள, யாதவர்கள் அந்த சந்நியாசியை பட்டு மெத்தை பரப்பிய பல்லக்கில் படுக்க வைத்து, சுபத்திரையை அதில் அமரச் சொல்லி விசிற வைத்து அலுங்காமல் குலுங்காமல் துவாரகை நோக்கி நடக்கத் துவங்கினார்கள்.

''இதென்ன அநியாயம்'' கண்ணன் கத்தினார்.

''ஒரு இளம் துறவியையும், கன்னிப் பெண்ணையும் ஒரே பல்லக்கில் வைத்து தூக்கிப் போகிறீர்கள். பருவப் பெண்ணையும் இளம் வயது வாலிபரையும் ஒரே இடத்தில் தங்க வைப்பதாக வேறு சொல்கிறீர்கள். இது பஞ்சையும், நெருப்பையும் ஒரே இடத்தில் வைப்பதற்கு சமமானது. இந்த துறவியை துவாரகைக்கு அழைத்துப் போவது சரியென்று எனக்குப் படவில்லை. கன்னி மாடத்தில் வைப்பது தவறு என்று தோன்றுகிறது. இவரை இந்த மலைக் குகையிலேயே விட்டுவிடுங்கள். காடென்றால் தபஸ்விகள் இருக்கத்தான் செய்வார்கள். இதனால் நாட்டிற்கு ஒரு தீங்கும் நேராது'' என்றார்.

பலராமருக்குதான் எடுத்த முடிவில் கிருஷ்ணன் குறை காண்பது பிடிக்கவில்லை.

''கிருஷ்ணா, சந்தேகப்படுவதற்கு ஒரு எல்லை வேண்டாமா. இந்த துறவியை இளம் வயதினன் என்று சந்தேகப்படுகிறாய். இவர் முகத்தில் வீசும் ஒளியைப் பார். முற்றும் துறந்தவர்கள் கன்னிமாடத்தில் இருப்பதால் ஒன்றும் நேர்ந்துவிட்டது. இவரால் சுபத்திரைக்கு நன்மையே ஏற்படும்'' என்றார்.

''உங்கள் விருப்பம் அண்ணா. என் மனதில் தோன்றியதைச் சொல்லிவிட்டேன். பின்னால் ஏதாவது நடந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.''



கிருஷ்ணன் விவாதத்திலிருந்து விலகிக் கொள்ள, பல்லக்கு கன்னி மாடம் போய்ச் சேர்ந்தது. முற்றும் துறந்த முனிவன் என்ற நினைப்பில் தன்னைச் சுற்றிச் சுற்றி வரும் சுபத்திரையை, அர்ஜுனன் விழிவிரியப் பார்த்தான். அவள் வசீகரத்தை கண்கொள்ளாது பருகினான். அவளிடம் தன் மனதை எப்படிச் சொல்வது. அவள் மனதை எப்படி அறிவது என்று புரியாமல் தவித்தான்.

எப்போது காண்போம் என்று ஏங்கித் தவித்த பெண் இதோ கைக்கெட்டும் தூரத்தில் ஒரு நாளைக்கு நூறு முறையாவது குனிந்து நமஸ்கரித்துக் கொண்டிருக்கிறாள். சங்கிலே பாலெடுத்து, குழந்தைக்குக் கொடுப்பதுபோல் புகட்டிக் கொண்டிருக்கிறாள். கடைவாயில் சிந்திய உணவை மேல் புடைவையால் துடைத்துக் கொண்டிருக்கிறாள். இருமினால் நெஞ்சை நீவிவிடுகிறாள். தூங்கினால் விசிறி விடுகிறாள்.

''அன்பே...'' என்று நான் ஒரு குரல் கொடுக்க முடியாது. நான் அர்ஜுனன் என்று இவளிடம் சொல்ல முடியாது. சொன்னாலும் நம்பமாட்டாள் போல் தெரிகிறது. இவளைச் சந்திக்காதபோது இருந்த காமவேகத்தைவிட இவள் அங்கிருந்து செய்யும் உபசரணைகளில் என் காமவேகம் அதிகரிக்கிறது. ஆனால், அவள் கையை நான் தொட இயலாது. ஆணின் அசைவில் ஒரு சிறு தவறு இருந்தாலும் அது பெண்ணுக்குப் புரிந்துவிடும். வில் வளைத்து போர் செய்யும் வீரரான நான் எதற்கு இந்த உத்தம வேடம் பூண்டேன். கையும், காலுமற்ற முடவனாய், பாறை உச்சியில் வெண்ணெய் உருகுவதைக் கண்டு பார்த்துக் கொண்டேயிருக்கும் பரிதாபமானவனாய் நான் ஏன் இங்கு இருக்கிறேன். சுபத்திரையைக் கைப்பிடிக்கும் ஆவல் அதிகரிக்கிறது. காண்டீபத்தை கொணரச் செய்து, வளைத்து

நாண் ஏற்றி, நாணை இழுத்து அதிரவைத்து துவாரகையை அலற வைக்கலாமா என்று ஆசை வருகிறது. எடுத்த கணமும், தொடுத்த கணமும், விடுத்த கணமும் எவரும் அறியாத வண்ணம் அம்பெய்து துவாரகையை செயலிழக்க செய்யலாமா என்கிற ஆவேசம் வருகிறது. ஆனால் கூடாது. செய்வது தவறு. கண்ணனுக்கு வாக்குக் கொடுத்திருக் கிறேன். 'சுபத்திரையின் மனசு தெரியாமல் சுபத்திரையைத் தொடமாட்டேன்' என்று சத்தியம் செய்து கொடுத்திருக் கிறேன்.

நான் தொடவில்லை. சுபத்திரை தொடுகிறாள். நான் சுபத்திரையை விரும்புகிறேன். அவள் என்னை விரும்பு கிறாளா என்று தெரியவில்லை. நான் 'இவள், சுபத்திரை' என்று அறிவேன். சுபத்திரை 'நான் அர்ஜுனன்' என்று அறிவாளா? தெரியவில்லை. இதுவரை சாய்ந்திருந்தது போதும், இனி தெம்புள்ளவனாய் நடிக்க வேண்டும். இதுவரை சுபத்திரையைப் பார்த்துப் பார்த்து ரசித்தது போதும். இனி கொஞ்சம் மனம்விட்டு பேசவேண்டும். அவள் மனதிலிருப்பது என்னவென்று ஆராயவேண்டும்.

அர்ஜுன சந்நியாசி நாடகத்தின் அடுத்த கட்டத்திற்குத் தாவினான்.

''துறவியே! நீங்கள் பரத கண்டம் முழுவதும் தீர்த்த யாத்திரை போய் வந்திருப்பதாக என் அண்ணா கிருஷ்ணன் சொன்னார். பரத கண்டம் முழுவதும் சுற்றிப் பார்த்திருக் கிறீர்களா? எல்லா நகரங்களுக்கும் போயிருக்கிறீர்களா?''

''எல்லா நகரங்களும் போய் வந்திருக்கிறேன் குழந்தாய்...''

''அஸ்தினாபுரம் போயிருக்கிறீர்களோ...''

''பலமுறை...''



''அங்கு பாண்டவர்களைப் பார்த்திருக்கிறீர்களோ.''

''பல நாட்கள் தங்கி அவர்கள் அரண்மனையில் விருந்துண்டிருக்கிறேன். அவர்களில் பீமன் எனக்குப் பிரிய நண்பர். கண்டால் தலைக்குமேல் தூக்கிப் போட்டு பந்தாகப் பிடிப்பார்.''

''அர்ஜுனன்?...'' அவள் குரலில் ஆவல் இருந்தது. அந்த ஆவல் அர்ஜுனனுக்குச் சந்தோஷமளித்தது.

''தெரியும்.''

''மிகச் சிறந்த வில் வீரராமே...?''

''ஓரளவு வித்தை தெரிந்தவன்தான்.''

''நல்ல அழகராமே...?''

''யவனத்தில் எல்லோரும் அழகாய்த்தான் இருப்பார்கள்.''

''ஆனால், அவர்கள் இப்போது அஸ்தினாபுரத்தில் இல்லையென்றல்லவா சொல்கிறார்கள்.''

''ஆமாம்... இந்திரபிரஸ்தம் போய்விட்டார்கள்.''

''அங்குபோய் நீங்கள் பார்க்கவில்லையா?''

''போனேன். அற்புதமான நகரம். அமைதியான ஆட்சி. தர்மர் நீதி தவறாமல் பரிபாலித்து வருகிறார்.''

''அர்ஜுனன் வில் வித்தை செய்யும்போது அருகிலிருந்திருக்கிறீர்களா, வேகமாய்ச் சுழலும் சக்கரத்திற்கு அப்பாலுள்ள மச்ச இலச்சினையை அடித்து வீழ்த்தினாராமே...''

''அப்படி நடந்தது...?''

''அப்படி நடந்ததென்றால் அது எதேச்சை என்று சொல்கிறீர்களா?''

‘‘அங்குள்ள மற்ற மன்னர்கள் அப்படித்தான் சொன்னார்கள். ஏதோ அம்புவிட்டான். இலக்கில் பட்டு விட்டது என்று சொன்னார்கள்.

‘‘நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...’’

‘‘ஏதேச்சை என்றுதான் எனக்கும் தோன்றுகிறது.’’

‘‘ஏன் இப்படிப் பொய் சொல்கிறீர்கள்.’’ சுபத்திரை சீற்றத்துடன் எழுந்தாள்.

‘‘பொய்யா, நானா? நான் துறவியம்மா...’’

‘‘துறவியாக நீங்கள் இருப்பினும் உங்களிடம் அர்ஜுனனைப் பற்றி ஒரு அவமரியாதையல்லவா இருக்கிறது. எல்லா உயிர்களையும் சமமாகப் பார்க்க வேண்டிய நீர் அர்ஜுனன் ஏதோ இருக்கிறான் என்பது போல் அலட்சியமாகச் சொல்கிறீரே. உமது வயதொத்த ஒரு இளைஞன் சீரும் சிறப்புமாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையோ. பாராட்டப்பட வேண்டியவற்றை பாராட்டாமலிருப்பது முனிவருக்குத் தகுமோ’’

சுபத்திரையின் கோபமும், படபடப்பும் அர்ஜுனனுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தன.

‘‘ஏதேது, அர்ஜுனனை நான் பாராட்டாவிட்டால் உன் உபசரிப்பை நிறுத்திவிடுவாய் போலிருக்கிறதே. அர்ஜுனன் நல்லவன் ஆனால், சற்று முன்கோபி.’’

‘‘நல்ல குணம் உள்ளவர்களுக்கு சற்று முன்கோபம் வரத்தான் செய்யும்.’’

‘‘அப்படியில்லை சுபத்திரை. தருமனைப் போல் அடக்கமானவனோ, நகுல சகாதேவனைப் போல் அமைதியானவனோ, பீமனைப்போல பணிவானவனோ அல்ல அர்ஜுனன். கொஞ்சம் படபடப்பானவன். எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவன்.’’



‘‘உண்மையிருக்கும் இடத்தில் உணர்ச்சிவசப்படல் இருக்கத்தான் செய்யும். அர்ஜுனனைப் பற்றி உங்களுக்கு இன்னும் என்ன தெரியும். எனக்குச் சொல்லுங்கள்.’’

‘‘அர்ஜுனன் இளைஞன். நீயோ பருவமடைந்தவள். எதற்குத் துருவித் துருவி அர்ஜுனனைப் பற்றியே கேட்கிறாய். அவன்மீது உனக்கு ஏதாவது...’’

‘‘ஒரு அபிமானம்தான்.’’

‘‘எம்மாதிரியான அபிமானம்.’’

‘‘வீரன், விவேகம். எவராலும் வெல்ல முடியாதவன் என்கிற வியப்புதான்.’’

‘‘அவனைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை உனக்கு உண்டோ...?’’

‘‘எல்லாப் பெண்களுக்குமே அர்ஜுனனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை இருக்கத்தான் செய்கிறது.’’

‘‘சரி. நானிருக்குமிடத்தில் அர்ஜுனன் அமர்ந்திருந்தால் எப்படி பார்ப்பாய்?’’

தன்னை மறந்து பேசிக் கொண்டிருந்த அந்த இளம் பெண், அந்த சூட்சுமமான கேள்விக்குப் பரிதவித்துப் போனாள். மிக வேகமாய் ஒரு நாணம் அவளைத் தாக்கிற்று. முகம் சிவந்தது. வளையல்கள் நடுங்கின. நெற்றி வியர்த்தது. நெஞ்சு விம்மித் தணிந்தது. கற்பனையாய் அவள் தன்னுள் அந்தக் காட்சியைக் காணும்போதே கிறக்கம் வந்தது.

‘‘எப்படிப் பார்ப்பேன்...’’ யோசித்தாள்; மெல்ல விலகினாள்; நாணி கரங்களில் முகம் புதைத்தாள். மெல்ல முன்னேறினாள். குனிந்து நமஸ்கரித்தாள். நிமிர்ந்து கை கூப்பினாள்.

''அர்ஜுனா, குந்தியின் மைந்தனே. என் தமையன் கிருஷ்ணன் உன் புகழைச் சொல்லிச் சொல்லி என்னில் உன்னை நான், புருஷனாக வரித்திருக்கிறேன். நீ எங்கிருப்பினும் பல்குணா, வில்லிற் சிறந்த விஜயா. என்னிடம் வந்து சேர்வாய். காலமெல்லாம் உம்மை கைப்பிடித்து வாழும் வரமருள்வாய்! தென்மேற்கிலிருந்து திரண்டு துவாரகைக்கு வரும் மேகங்களையெல்லாம் இந்திரப்ரஸ்தத்திற்குப் போய் என் மனதை அர்ஜுனனுக்குச் சொல்லுங்கள் என்று தூதாக அனுப்புகிறேன். வடகிழக்கிலிருந்து மேகம் வந்தால் அர்ஜுனன் அதைப் பார்த்திருப்பானோ என்று பெருமூச்சு விடுகிறேன். நிலவு உச்சியில் வரும்போது இப்போது என்னையும் சேர்த்து வைத்திருக்கிற ஒரே பொருள் நிலவுதான் என்று நொந்து பாடியிருக்கிறேன்.

அர்ஜுனா, துவாரகைக்கு நீ மறுபடியும் எப்போது வருவாய்?''

சுபத்திரை, தன்னை மறந்து பேசினாள்; கண்ணீர் விட்டாள்; உடம்பு நடுங்க தரையில் சரிந்தாள்.

''சுபத்திரை, நான் அர்ஜுனன். உன்னைத் தேடி உன் நினைவாகவே வந்திருக்கும் அர்ஜுனன். இதோ, என் கைகளிலுள்ள தழும்புகளைப் பார். என் தோளில் அம்பறாத் துணி மாட்டி அழுந்திய வடுவைப் பார். நானே அர்ஜுனன். இத்தனை பிரியம் என்மீது நீ வைத்திருக்கிறாய் என்று தெரிந்தால் நான் இன்னமும் முன்னமே வந்திருப்பேன். நான் வந்தது கண்ணனுக்குத் தெரியும். கண்ணனுக்கு மட்டுமே தெரியும்.''

சுபத்திரை திடுக்கிட்டு எழுந்தாள். அவன் காட்டிய தழும்புகளைப் பார்த்தாள். பயந்து அவன் தங்கிய இடத்தை விட்டு வெளியே ஓடினாள். கிருஷ்ணனிடம் ரகசியமாகப் பேசி அது அர்ஜுனன்தான் என்று தெரிந்து கொண்டாள்.



''அவனை நீ சந்திக்க வேண்டாம். நீங்கள் சேருவதற்குண்டான ஏற்பாட்டைச் செய்கிறேன். அமைதியாக இரு'' என்று கிருஷ்ணர் கட்டளையிட, அதற்கு அடங்கி அர்ஜுனனைப் பார்க்காமலிருந்தாள். வயிறு பசித்திருக்க உணவு வாசனையை முகர்ந்தபின் வெளியே போ என்று விரட்டப்பட்ட பிச்சைக்காரனைப் போல் அறைக்குள் அர்ஜுனன் தவித்தான்.

''கபட சந்நியாசியே! இன்னும் சிறிது காலம் பொறுத்திரு'' என்று கிருஷ்ணன் கட்டளையிட, சுபத்திரைக்காக அந்த அறைக்குள் கடும் தவத்தை மேற்கொண்டான். இன்னும் மெலிந்தான்.

பிரிவுத்துயர் இருவரையும் தவிக்க வைத்தது, தவிப்பு அடங்க சிறிது காலம் பிடித்தது. அர்ஜுனன் நினைவாகவே இருந்த சுபத்திரை நோய்ப்பட்டாள். அந்த நோய் தீர பலராமர் துவாரகைக்கு அருகேயுள்ள தீவுக்குப் போய் முப்பது நாள் நோன்பிருக்க முடிவு செய்தார். அவர் கப்பலில் பயணமானதும், அர்ஜுனன் தவவேடம் களைந்து நோய்ப்பட்ட சுபத்திரையை தேரில் ஏற்றி இந்திரப்ரஸ்தம் நோக்கிப் பறந்தான். எஞ்சியுள்ள யாதவர்கள் கூச்சலிட்டார்கள். பலராமருக்குப் போய் விஷயம் சொன்னார்கள்.

''அந்த சந்நியாசி அர்ஜுனனா? கபடமாய் வந்து சுபத்திரையைக் கவர்ந்து சென்றானா? ஏன் அப்படிச் செய்ய வேண்டும். யாதவர்களைப் போருக்கு இழுத்துப் பார்க்கிறானா? என் புஜபலத்தை பரிசோதிக்க எண்ணியிருக்கிறானா?'' தோள் தட்டிப் புறப்பட்டார்.

''நான் அப்போதே எச்சரித்தேன். நீங்கள் கேட்கவில்லை. இப்போது இதிலுள்ளது இரண்டே வழிகள்தான். ஒன்று, அர்ஜுனனோடு போர் புரிவது. இன்னொன்று

சுபத்திரையை அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்து விடுவது. என்ன செய்யப் போகிறீர்கள்.'' கிருஷ்ணர் மறித்து தடுக்க,

''போர்... போர்'' என்று யாதவர்கள் குரல் கொடுத்தார்கள்.

''அர்ஜுனனைப் பற்றித் தெரியாமல் பேசுகிறீர்கள். காதல் கொண்டவன் எவ்வளவு மூர்க்கத்துடன் மோதுவான் என்பது புரியாமல் பேசுகிறீர்கள். சரி, அவ்விதமே அர்ஜுனனை அடித்து நொறுக்கி விட்டீர்கள். அப்போது சுபத்திரையின் கதி என்ன? விரும்பி ஒரு புருஷனோடு போயிருக்கிற பெண்ணைக் கொணர்ந்து என்ன செய்வீர்கள். பாண்டவரோடு சண்டையா, சமாதானமா?

''அர்ஜுனன், முட்டாள்; மூர்க்கன்'' பலராமர் சீறினார்.

''குடித்தனம் செய்யப் போவது சுபத்திரை, மற்றது பற்றி உமக்கென்ன கவலை?''

''சிறையெடுத்தது பிடிக்கவில்லை.''

''முறைப் பெண்ணை சிறையெடுத்துச் சென்றான். எந்த ஊரிலும் இதைத் தவறு என்று மறுக்க மாட்டார்கள்.''

''சீர் கொண்டு போய் கொடுத்து முறையாய் திருமணம் செய்வதே சிறப்பு.'' யாதவப் பெரியவர்கள் சமாதானம் சொன்னார்கள்.

சீர்வரிசைகள் வண்டிகளில் கட்டி யாதவர்கள் போக,, பாண்டவர்கள் அவர்களைச் சகல மரியாதையுடன் வர வேற்றார்கள். அர்ஜுனனுக்கும் சுபத்திரைக்கும் விமரிசை யாய் விவாகம் - கிருஷ்ணனும் பலராமரும் நடத்தி வைத்தார்கள் துவாரகைக்குத் திரும்பினார்கள்.



இச்சைப்பட்டது இச்சித்த களைப்பில் சுபத்திரையை அணைத்தபடி அர்ஜுனன் உறங்கினான்.

இனி என்ன, அவனுக்கு தூங்கும்போதே கேள்வி வந்தது.

## 4

**கா**தலித்த பிறகு அயர்ச்சி வருகிறதோ இல்லையோ திருமணம் என்பதற்குப் பிறகு ஒரு அயர்ச்சி வரத்தான் செய்கிறது. அது அயர்ச்சியில்லை. இனி என்ன என்ற கேள்வி. கூத்து முடிந்து இல்லத்திற்குத் திரும்பும்போது கூத்து பாதியும், வீடு பாதியுமாய் நினைவிலிருக்குமே, அதைப்போன்ற ஒரு அதிசயம். கண்மூடித் தூங்கும்போது கட்டியக்காரன் வந்து கூவிக் கொண்டு போனதும் கதாநாயகன் வந்து சபதம் செய்ததும் நாயகி புலம்பி அழுததும் கெட்டவன் திட்டம் தீட்டியதும் அப்போது, அதைப் பார்க்கும்போது நெஞ்சுபட்ட உணர்ச்சியை மனது மெல்லியதாய் நினைவுபடுத்திக் கொண்டு உத்தராம் பார்த்துப் படுத்திருக்கும் நாடகமும் மறக்காமல் வீடும் உறைக்காமல் தூங்கும் முன்பே ஒரு சொப்பன நேரம் வரும்.

சுபத்திரைக்கு சொப்பனமல்ல அது. முடிந்த பிறகு அந்தப் போராட்டம் இப்பொழுது சொப்பனமாக உள்ளே ஓடிக்கொண்டிருக்கிறது. விழித்துக் கொள்ள வேண்டும். தலை சிலுப்பி மறுபடியும் சோம்பல் முறித்து அடுத்த வேலைகளைப் பார்க்க வேண்டும். விரதம், தீர்த்த யாத்திரை, திருமணம், விருந்து என்று பொழுது போக்கிவிட்டது. விடிந்ததும் குளித்து பூஜை செய்து காண்டீபத்தைக் கையிலெடுத்துக் கொள்ள வேண்டும். வளைத்து நாண்

மீட்டி விறைப்பு கவனிக்க வேண்டும். வானில் இரண்டு, மூன்று சரம் எய்து உரம் பார்க்க வேண்டும் அர்ஜுனன் தூக்கத்திலேயே திட்டமிட்டான்.

உஷத்கால நேரத்தில் குளியல் தொட்டி நோக்கிப் போனான். அதற்குமுன் குளித்து, பூஜை முடித்து மங்கலச் சின்னங்களோடு சுபத்திரை எதிர்ப்பட்டாள். அவனை வணங்கினாள். அவன் குளிக்கும் வரை காத்திருந்து அவன் காண்டீப பூஜையை அருகிருந்து கவனித்துப் பார்த்தாள்.

''உங்கள் வில்வித்தையைப் பார்க்க ஆசை'' என்று மெல்லச் சொன்னாள்.

''வித்தைகள் ஏதும் இப்பொழுது செய்யப் போவதில்லை சுபத்திரா, வெறுமே நாண் கட்டி வேகம் பார்க்கப் போகிறேன்.''

''அதை நான் பார்க்கக் கூடாதா?''

''தாராளமாகப் பார்க்கலாம். நாண் அதிர்வுக்கு பயந்து விடாதே.''

ஆனாலும் நாண் அதிர, சுபத்திரா பயந்தாள். பயந்ததற்கு நாணினாள். அவன் அம்பு தொடுத்து நிற்பதை ஆவலுடன் பார்த்தாள். காதுபூவரை இழுத்த நாணிலிருந்து அம்பு பறந்தது.

''அம்பு எங்கே?'' வெகுளியாய்க் கேட்டாள்.

''இந்நேரம் துவாரகை தாண்டி கடலுக்குள் விழுந்திருக்கும்.'' அர்ஜுனன் சாதாரணமாகச் சொன்னான்.

''இந்திரப்ரஸ்தத்திலிருந்து துவாரகைக்கு அம்பு போகுமா?''

''எதிர்காற்று இல்லையெனில் அம்பு சீக்கிரம் போயிருக்கும்.''



''இன்று அவ்வளவுதான் வித்தைகளா?''

''இன்று இதுபோதும். தேவையின்றி வில்லில் வித்தைகள் செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது. எவரும் என் நாண் அதிர்வு கண்டு அச்சப்பட்டுவிடக்கூடாது. நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம் வா.''

அர்ஜுனனின் புதிய மனைவியை, கண்ணனின் அன்புத் தங்கையை இந்திரப்ரஸ்தத்து மக்கள் ஒவ்வொரு வரும் வரவேற்றார்கள். அங்கங்கே ஆரத்தி எடுத்து திலக மிட்டார்கள். அவரவர் குல வழக்கப்படி உபசரித்தார்கள்.

''அழகு அழகு கொள்ளை அழகு'' என்றார்கள்.

''மன்மதனும் ரதியும் போன்றே இருக்கிறீர்கள்''என்று வாழ்த்தினார்கள்.

''அர்ஜுனனுக்கு ஒரு வீரமகனைப் பெற்றுக் கொடம்மா'' என்று குலவையிட்டார்கள். நகர மக்களின் அன்பில் அந்த யாதவ குலப்பெண் நெகிழ்ந்து போனாள். புருஷனை நகரத்து மக்கள் பாராட்டும்போதெல்லாம் பூரித்துப் போனாள். மனைவியை நகரத்து மக்கள் வாழ்த்தும் போதெல்லாம் அர்ஜுனன் அகமகிழ்ந்தான்.

''கிருஷ்ணன் தங்கையையே சிறைப்பிடித்து விட்டீர்களே, அதுதான் ஐயா சாமர்த்தியம்'' என்று மக்கள் பாராட்டியபோதும் புளகாங்கிதம் அடைந்தான். வாழ்த்தும் மக்களை அரச குடும்பம் வெறும் கையோடு வீட்டுக்கு அனுப்பலாமா, தான் கொண்டு வந்த சீரில் ஒரு சிறு பகுதியைக் கொண்டு வரச் சொல்லி பொன்னும், மணியும் சுபத்திரை வாரி வழங்கினாள். ''இவை துவாரகையின் பசுக்கள்'' என்று நல்லோர்க்கு கறவைகள் வழங்கினாள். அவள் தானத்தில் ஊர் திணறிற்று.

''கிருஷ்ணனின் தங்கையல்லவா நீ! வழங்குவதில் யாதவருக்கு இணை எவரும் உண்டோ?'' என்று ஊர் கொண்டாடிற்று. மனைவியின் சிறப்புகள் கணவனுக்கு கர்வம் கொடுத்தன. கணவனின் மதிப்பு கண்டு மனைவிக்கு கிறுகிறுத்தது.

''நான் யாதவப் பெண்ணாக இருக்கலாம். இனி இந்திரப்ஸ்தமே என் ஊர். உங்களுக்குண்டான சுக துக்கங்களில் எனக்கும் பங்குண்டு! என் கணவர் அர்ஜுனன் ஊரிலிருந்தாலும் இல்லாது போனாலும் நீங்கள் எந்த உதவியை நாடியும் என்னிடம் வரலாம். எப்போது வேண்டுமானாலும் என் வீட்டு கதவைத் தட்டலாம். என்னை உங்களில் ஒருவளாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னை நீங்கள் யாதவப் பெண் என்று சொல்வதைவிட அர்ஜுனனின் மனைவி என்று அழைப்பதே ஆனந்தமளிக்கும் விஷயம். குந்திதேவியின் மருமகளாக இருப்பதே நான் பெறும் பேறு.''

ஊர் மீண்டும் குலவையிட்டது. அர்ஜுனனும், அவன் மனைவியான சுபத்திரையும் அரண்மனைக்குத் திரும்பினார்கள். ஊர் கொண்ட குதூகலம் பார்த்து அரண்மனையும் குதூகலித்தது. அர்ஜுனனுக்கென்று அமைந்த தனிமாளிகையில் சுபத்திரை தன் குடித்தனம் தொடங்கினாள். அவள் விடுத்த வேண்டுகோளின்படி ஊர், அவளை அடிக்கடி வந்து பார்த்து உதவிகள் பெற்று உபசாரங்கள் சொல்லிப் போயிற்று. அர்ஜுனனின் இல்வாழ்க்கை அற்புதமாய் தொடங்கியது.

''அது என்ன?'' வானத்தில் கந்தர்வன் தோளை பற்றிக் கொண்டிருந்த கந்தர்வி கீழே சுட்டிக்காட்டி கேட்டாள்.



''இந்திரப்ரஸ்தம்.''

''யாருடைய ஊர் அது?''

''பாண்டவர்களில் மூத்தவரான தருமர் ஆட்சி செய்யும் இடம் அது. அமைதியின் பிறப்பிடம். நீதி தேவதை ஆட்சி செய்யுமிடம்.''

''இன்னொரு முறை அந்த நகரைச் சுற்றி வரலாமா?''

''உன் விருப்பம்.''

கந்தர்வர்கள் தாழப் பறந்தார்கள். கீழே அன்றைய பயிற்சிக்காய் காண்டீபம் அதிர்ந்தது. கந்தர்வி அந்த அதிர்வு தாளாது கந்தர்வனை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். கந்தர்வனும் இறுக்கிக் கொண்டான்.

''மீண்டும் காண்டீபம் அதிருமோ?''

''அதிரலாம்.''

''அந்த அதிர்வு என்னை அதிரச் செய்கிறதே.''

''இன்னும் இறுக்கிக் கொள்ளேன்.''

கந்தர்வி, கந்தர்வனைத் தழுவிக் கொண்டாள். அவள் தழுவலில் கிளர்ச்சியுற்று கந்தர்வன் அவளை முத்தமிட்டான். நகரத்தின் எல்லையூடே தேர் ஒன்று நகரத்தை நோக்கி விரைவாய்ப் போய் கொண்டிருந்தது. சூரியனின் கிரணங்கள் வெளியே வந்து வானைச் சிவப்பாக்கின. மீண்டும் நாண் அதிர்ந்தது. கந்தர்வி, கந்தர்வனை இறுக்கிக் கொண்டாள். சரங்கள் அவர்களை உரசி கொண்டு பாய்ந்தன.

''யார் நம்மீது சரம் தொடுக்கிறார்கள்?''

''எவருமில்லை. அர்ஜுனனுடைய பயிற்சிக்கான அம்புகள் அவை. பயப்படும்போது நீ சூரியனை விடச்

சிகப்பாக இருக்கிறாய்.'' கந்தர்வன், கந்தர்வி... கொஞ்சினான்.

தேர் நகரத்தின் எல்லையில் நின்றது. கிருஷ்ண... அதிலிருந்து இறங்கி கைகால்கள் சுத்தம் செ... கொண்டான். முங்கிக் குளித்து நீராடினான். மீண்டும் நா... அதிர்ந்தது. கந்தர்வி, கந்தர்வனோடு பயத்தில் பின்... பிணைந்து கொண்டாள். கந்தர்வன் அவளை முத்த... கந்தர்வி முகம் விலக்கினாள்.

கிருஷ்ணன் இடுப்பு நீரில் நின்று உள்ளங்கையில் நீ... எடுத்து சூரியனை நோக்கி அதிகாலைக்குண்ட... மந்திரங்கள் சொல்லி அர்க்யம் இறைத்தான்.

மீண்டும் நாண் அதிர்ந்தது. கந்தர்வியின் பயம் போ... கந்தர்வன் அவளை முத்தமிட, சரங்கள் அவர்களை உரசி... போயின. கந்தர்வி பயத்துடன் கண்மூடி முகம் திருப்பினா... கந்தர்வனின் உதட்டெச்சில் அவன் வாயினின்றும் தப்... தரை நோக்கி விழத் தொடங்கியது. கந்தர்வியை உதறி... கந்தர்வன் தன் எச்சிலைத் தடுக்க கீழ்நோக்கி பறந்தான்... கந்தர்வி, அவன் தன்னை விட்டு விலகுகிறானோ என்று... பயத்தில் இறுக்கிக் கொண்டாள். கிருஷ்ணன் இரண்டாவது முறையாய் உள்ளங்கையில் நீர் எடுத்து, அர்க்யமாக... இறைத்தான்.

''விடு என்னை...'' கந்தர்வி திமிறியும் கந்தர்வன் விடவில்லை. எச்சில் தரை நோக்கி சரமழையாய்ப் போய்க் கொண்டிருந்தது.

மீண்டும் நாண் அதிர, கந்தர்வி, ''என்னை விட்டு எங்கே போகிறீர்கள்?'' என்று கூச்சலிட்டாள். அவன் கீழே பறக்க, அவனை மேலே தூக்கினாள்.



மூன்றாவது முறையாய் உள்ளங்கையில் நீர் எடுத்து மந்திரம் சொல்ல, கிருஷ்ணனது உள்ளங்கை நீரில் அந்த கந்தர்வன் எச்சில் சரமாய் விழுந்து கலந்தது. கிருஷ்ணர் கை உதறினார். கடும் கோபத்துடன் மேலே பார்த்தார். இரண்டு கந்தர்வர்கள் புரண்டு தவிப்பதை உற்று கவனித்தார்

''என் அர்க்யத்தை தன் எச்சிலால் தூய்மையற்றதாய் செய்தவன் எவனோ அவன் தலை இன்றைய சூர்யோதயத் திற்குள் என் காலடியில் கிடக்கும். இது ஆணை'' என்று நீரின் மீது அறைந்தார். கலங்கித் தெளிந்த அந்த நீரிலிருந்து இன்னொரு கை அர்க்யம் எடுத்து விட்டுவிட்டு தேர் ஏறினார். தருமரின் அரண்மனை நோக்கி செலுத்தினார்.

வல்லூறுகள் மரம்விட்டு எழுந்து இடைவிடாது கூச்சல் போட்டன. காட்டு மிருகங்கள் இடம்பெயர்ந்தன. கைக் எறும்புகள் தரை நோக்கிப் போய் புற்று தேடின. நாய்கள் ஊளை குழந்தைகள் காரணமின்றி அழுதன. நகரத்தின்மீது சூழ்ந்து விட்டன. நீரற்ற மேகங்கள் சூரியனைச் சுற்றி ஒரு ஒளிக் கோட்டை கொண்டன. கீழே வெள்ளித்தீயின் நாக்குகள் திசை மாறிச் உருவாயிற்று. பலருக்கு படியில் கால் இடறிற்று. நடுத்தெருவில் சுழன்றன. புழுதி சுழன்று நடக்கத் தொடங்கியது. கறவைகள் கால் உதைத்து அலைந்தன. எல்லோர் மனதிலும் ஏனோ இனம் புரியாத கவலை சூழ்ந்து கொண்டது. கந்தர்வன் மயக்கமாகி ஒரு மரக்கிளையில் சாய்ந்தான். கந்தர்வி அவனை மடியில் போட்டுக் கொண்டு அழுதாள்.

''என்ன நடந்தது, என்ன நடந்தது. ஏன் இப்படி மயக்கமாகிவிட்டுடீர்கள்'' என்று அவனை உலுக்கினாள். கந்தர்வன் நடந்ததைச் சொன்னதும் கவலைப்பட்டாள். இனி என்ன செய்வது என்று இருவரும் தவித்தார்கள்.

சிவபெருமானை நோக்கி தியானம் செய்தார்கள். அபயம் அபயம் என்று அலறினார்கள்.

''கிருஷ்ணனே உன் தலை இன்று சூர்யோதயத்தியற்கு அவன் காலடியில் கிடக்கும் என்று சொல்லிவிட்ட பிறகு அதை தடுக்க என்னாலோ பிரம்மனாலோ முடியாது. கிருஷ்ணன் திருமால் அம்சம் என்று உனக்குத் தெரியாதா, அவர் வரும் வழியில் விலகியிருக்கும் தன்மை நீ அறியாதவனா. இதுவிதி. அனுபவி'' என்று மறுப்பு வந்துவிட்டது. கந்தர்வன் மறுபடியும் மூர்ச்சையானான். கந்தர்வி, 'இந்த வேதனை என்னால்தானே, என்னால் தானே' என்று புலம்பினாள். அவள் புலம்பல் பிரபஞ்சம் முழுவதும் ஆட்டியது.

நடந்ததும், நடப்பதும், நடக்கப்போவதும் அறிந்த நாரதரின் காதில் அந்த ஓலம் விழுந்தது.

''புலம்பி என்ன புண்ணியம் கந்தர்வி. சிவனும், பிரம்மனும் மறுத்துவிட்ட பிறகு இனி யாரை நோக்கிப் புலம்புகிறாய். ஆனால், உன் வேதனையைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. வேண்டுமென்றே செய்ததில்லையாயினும் இது விதிவசத்தால் நேர்ந்த விஷயம். இது தடுக்க ஒரே ஒரு உபாயம் உண்டு''

''என்ன அது?''

''கிருஷ்ணனை எதிர்த்துப் போரிடக்கூடிய ஒரே ஆள் இந்த உலகத்தில் உண்டு.''

''நாரதரே, யார் அது?''

''அர்ஜுனன். அவனால் மட்டுமே கிருஷ்ணனின் கோபத்தை தடுத்து நிறுத்த முடியும். சரியான நேரம் பார்த்து நீங்கள் இருவரும் அர்ஜுனனிடம் நேரே போய் நடந்ததைச்



சொல்லி, 'அபயம், அபயம்' என்று குரல் கொடுங்கள். அவன் மனைவி சுபத்திரையின் காலில் பணியுங்கள். அவள் பொருட்டு அர்ஜுனன் எதுவேண்டுமானாலும் செய்வான். அவனையும் பகைத்துக் கொள்வீர்களெனில் உங்களைக் காப்பாற்ற எவ்வுலகிலும் ஆள் இல்லை. கவனமாய் செயல்படுங்கள்.''

அர்ஜுனன் வீட்டு விளிம்பில் அந்த கந்தர்வனும் கந்தர்வியும் நின்றுகொண்டார்கள். உணவு முடித்து மனைவியின் கையால் ஒவ்வொரு தாம்பூலச் சுருளாய் வாங்கி உண்டபடியே அர்ஜுனன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்க, உள்ள நுழைந்தார்கள். கந்தர்வி முதலில் போய் அர்ஜுனன் காலில் விழுந்தாள். ஒரு இளம் பெண் தன் காலில் விழுந்து வணங்குவது கண்டு அர்ஜுனன் கை உயர்த்தி, ''தீர்க்கசுமங்கலியாய் இருப்பாய்'' என்று வாழ்த்தினான். கந்தர்வி நிமிர்ந்தாள். அழுதாள்.

அரசனை வணங்கவேண்டுமென்று அந்த நேரத்தில் நிறையப் பேர் வருவார்கள். வெகு சிலரே குறைகள் சொல்வார்கள். விவசாயிகள் விளைபொருள்கள் கொடுத்து, பயிர் நிலவரம் சொல்லிவிட்டுப் போவார்கள். தொழில் வல்லுநர்கள் புதிதான படைப்புகள் அரசனுக்குக் காட்டி ஆலோசனையும், உதவியும் பெற்றுப் போவார்கள்.

காலையில் பானை வனைபவன் வந்தான். மெல்லிய மண்தட்டுக்களில் பொன் வர்ணம் பூசி பூக்கள் எழுதியிருந்தான். சுபத்திரை தட்டித் தட்டிப் பார்த்து வியந்தாள்.

''பொன்னல்ல அம்மணி, மண்தான். சாப்பிட்ட தட்டிலே சாப்பிட வேண்டாம். அப்படி உண்பது எச்சிலென அந்தணர்கள் சொல்கிறார்கள். இது உத்தமம் என்கிறார்கள். அரசன் மண் தட்டில் சாப்பிடுவதைவிட பொன்னிற தட்டில்

சிவபெருமானை நோக்கி தியானம் செய்தார்கள். அபயம் அபயம் என்று அலறினார்கள்.

''கிருஷ்ணனே உன் தலை இன்று சூர்யோதயத்திற்கு அவன் காலடியில் கிடக்கும் என்று சொல்லிவிட்ட பிறகு அதை தடுக்க என்னாலோ பிரம்மனாலோ முடியாது. கிருஷ்ணன் திருமால் அம்சம் என்று உனக்குத் தெரியாதா, அவர் வரும் வழியில் விலகியிருக்கும் தன்மை நீ அறியாதவனா. இதுவிதி. அனுபவி'' என்று மறுப்பு வந்துவிட்டது. கந்தர்வன் மறுபடியும் மூர்ச்சையானான். கந்தர்வி, 'இந்த வேதனை என்னால்தானே, என்னால் தானே' என்று புலம்பினாள். அவள் புலம்பல் பிரபஞ்சம் முழுவதும் ஆட்டியது.

நடந்ததும், நடப்பதும், நடக்கப்போவதும் அறிந்த நாரதரின் காதில் அந்த ஓலம் விழுந்தது.

''புலம்பி என்ன புண்ணியம் கந்தர்வி. சிவனும், பிரம்மனும் மறுத்துவிட்ட பிறகு இனி யாரை நோக்கிப் புலம்புகிறாய். ஆனால், உன் வேதனையைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. வேண்டுமென்றே செய்ததில்லை யாயினும் இது விதிவசத்தால் நேர்ந்த விஷயம். இது தடுக்க ஒரே ஒரு உபாயம் உண்டு''

''என்ன அது?''

''கிருஷ்ணனை எதிர்த்துப் போரிடக்கூடிய ஒரே ஆள் இந்த உலகத்தில் உண்டு.''

''நாரதரே, யார் அது?''

''அர்ஜுனன். அவனால் மட்டுமே கிருஷ்ணனின் கோபத்தை தடுத்து நிறுத்த முடியும். சரியான நேரம் பார்த்து நீங்கள் இருவரும் அர்ஜுனனிடம் நேரே போய் நடந்ததைச்



சொல்லி, 'அபயம், அபயம்' என்று குரல் கொடுங்கள். அவன் மனைவி சுபத்திரையின் காலில் பணியுங்கள். அவள் பொருட்டு அர்ஜுனன் எதுவேண்டுமானாலும் செய்வான். அவனையும் பகைத்துக் கொள்வீர்களெனில் உங்களைக் காப்பாற்ற எவ்வுலகிலும் ஆள் இல்லை. கவனமாய் செயல்படுங்கள்.''

அர்ஜுனன் வீட்டு விளிம்பில் அந்த கந்தர்வனும் கந்தர்வியும் நின்றுகொண்டார்கள். உணவு முடித்து மனைவியின் கையால் ஒவ்வொரு தாம்பூலச் சுருளாய் வாங்கி உண்டபடியே அர்ஜுனன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்க, உள்ள நுழைந்தார்கள். கந்தர்வி முதலில் போய் அர்ஜுனன் காலில் விழுந்தாள். ஒரு இளம் பெண் தன் காலில் விழுந்து வணங்குவது கண்டு அர்ஜுனன் கை உயர்த்தி, ''தீர்க்கசுமங்கலியாய் இருப்பாய்'' என்று வாழ்த்தினான். கந்தர்வி நிமிர்ந்தாள். அழுதாள்.

அரசனை வணங்கவேண்டுமென்று அந்த நேரத்தில் நிறையப் பேர் வருவார்கள். வெகு சிலரே குறைகள் சொல்வார்கள். விவசாயிகள் விளைபொருள்கள் கொடுத்து, பயிர் நிலவரம் சொல்லிவிட்டுப் போவார்கள். தொழில் வல்லுநர்கள் புதிதான படைப்புகள் அரசனுக்குக் காட்டி ஆலோசனையும், உதவியும் பெற்றுப் போவார்கள்.

காலையில் பானை வனைபவன் வந்தான். மெல்லிய மண்தட்டுக்களில் பொன் வர்ணம் பூசி பூக்கள் எழுதியிருந்தான். சுபத்திரை தட்டித் தட்டிப் பார்த்து வியந்தாள்.

''பொன்னல்ல அம்மணி, மண்தான். சாப்பிட்ட தட்டிலே சாப்பிட வேண்டாம். அப்படி உண்பது எச்சிலென அந்தணர்கள் சொல்கிறார்கள். இது உத்தமம் என்கிறார்கள். அரசன் மண் தட்டில் சாப்பிடுவதைவிட பொன்னிற தட்டில்

சாப்பிடுவது உயர்வு. என மண்ணுக்கு பொன் வண்ண தோய்த்துக் கொண்டு வந்தேன். பிடித்திருக்கிறதா?''

''அற்புதம். ஆறுவித தட்டுக்கள் செய்யும். எங்க அன்னையாருக்கும், எங்கள் ஐவருக்கும் சேர்ந்து தர் தட்டு, பீமன் தட்டு. அர்ஜுனன் தட்டு என்று செய்யு பார்த்தவுடனேயே வித்தியாசம் தெரியும்படி செய்யும். இ நீர் கொண்டு வரும் தட்டிலேயே உணவருந்துவோம் அர்ஜுனன் பெரிய பொன் முடிப்பை அந்தக் கலைஞனிட கொடுத்தான்.

''பொதுமக்களுக்கும் பொன் தட்டு செய் வழங்கலாமே. குறைந்த விலையில் விற்பனை செய்யலாமே, குழந்தைகள் தட்டின் கவர்ச்சியால் அதிக சாப்பிடுமல்லவா, விலைக் குறைப்பிற்கு ஈடாய் இந்தப் பொன்னையும் வைத்துக் கொள்ளுங்கள்.'' சுபத்திரையு பொன் கொடுத்தாள்.

''நல்ல யோசனை!'' அர்ஜுனன் பாராட்டினான்.

பிறகு தேர் வந்தது. தச்சுக் கலைஞர் உறுதியான மரத்தில் மெல்லிய சக்கரங்களுடன் நாலு குதிரை பூட்டக் கூடிய தேர் கொண்டு வந்தார். கீழே மரத்தால் வில் அமைத்து குலுங்கல் ஏற்படாதபடி இரும்புப் பட்டையும் சேர்த்து வைத்திருந்தார். தேர் காற்றில் பறப்பது போல் பறந்தது. காலூன்றிக் கொள்ள வகையான இடங்கள் எவை எவை என்று அவனுக்குச் சொல்லிக் கொடுத்து சாரதிக்கு தடுப்பு வேண்டுமென்று சொல்லி இன்னொரு தேர் வேண்டு மென்று உத்தரவிட்டு அதற்கும் நிதியளித்தான்.

புலவர்களோடு பேசிக் கொண்டிருந்தான். அரண்மனை சேவகர்கள் கண்ணன் வந்திருப்பதாகவும் எந்நேரமும் இங்கு வரலாமென்றும் சொன்னார்கள்.



''அண்ணா என்னைப் பார்க்க அல்லவா முதலில் வருவார்கள் என்று நினைத்தேன்.'' சுபத்திரை கவலையோடு பேசினாள்.

''அது முறையல்ல சுபத்ரா. தர்மரைப் பார்க்காது அவர் என்னைக்கூட காணவருவதில்லை. அங்கே தர்மருக்கே முதல் மரியாதை. கண்ணன் மரியாதை தெரிந்தவர்.'' அர்ஜுனன் பேச, சுபத்திரை அதை ஏற்றுக் கொண்டாள். அண்ணனின் வரவுக்கு ஆவலாகக் காத்திருந்தாள். அதற்கிடையே சட்டென்று ஒரு பெண் அழுததும், கவலைப்பட்டாள்.

'என்ன அவலம் இது?' என்று கவலையோடு அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தாள்.

''தீர்க்கசுமங்கலி என்று விஜயர் வாழ்த்தியதற்காகவா அழுகிறாய். எனக்கு உன் அழுகை புரியவில்லையே!'' கொஞ்சம் கோபமாகச் சொன்னாள். கந்தர்வன் முன்னேறினான். புருஷன் மனைவியுமாய் அருகருகாய் நிற்க, இருவர் காலிலும் விழுந்து வணங்கினான்.

அவன் மரியாதையை அவர்கள் அன்போடு ஏற்றுக் கொண்டார்கள். அவன் பணிவோடு நிற்பதை உற்றுப் பார்த்தார்கள்.

''கந்தர்வர்களா?'' அடையாளம் தெரிந்து கொண்டு அர்ஜுனன் விசாரித்தான். ஆமென்று அந்தத் தம்பதிகள் மறுபடியும் படிந்தார்கள்.

மனிதர்களிலும் உயர்ந்த கந்தர்வர்கள் மிகுந்த அடக்கமாய் தன் புருஷனை பணிவது பார்த்து சுபத்திரை வியந்தாள். சந்தோஷப்பட்டாள்.

''கந்தர்வர்களுக்கு துக்கம் உண்டோ?''

''உண்டு அம்மா. துக்கம் எல்லோருக்கும் பொ
மாயையின் விளைவு. புத்தியாலோ சக்தியாலோ துக்
போய்விடாது. மாயை நீங்கியவரே துக்கம் நீக்கமுடியு
மாயை நீக்குவது வேறு விஷயம். அது மனிதனாலு
முடியும். மனிதரில் மாயை நீக்கி உயர்ந்தோர் உண்டு.''

''நல்லது! உங்கள் துக்கம் என்ன?''

''விஜயர் 'தீர்க்கசுமங்கலி பவ' என்று வாழ்த்தினார்.''

''ஆமாம். அது தவறா?''

''தவறில்லை. அவர் வாக்கு தவறிவிடக்கூடா
என்பதுதான் கவலை.''

கந்தர்வன் கனமான அமைதியோடு பேசினான்.

''என் வாக்கு தவறுவதா?''

அர்ஜுனன் ஊஞ்சல் சட்டென்று நின்றது.

''ஆம். அர்ஜுனரே! நான் உயிரோடு இருந்தால்தா
என் மனைவி சுமங்கலியாக இருக்க முடியும்.''

''நீர் உயிரோடுதானே இருக்கிறீர்?''

''இப்போது இருக்கிறேன். இனி இறக்கலாம்.''

''இனியெனில், எப்போது.''

''இன்று மாலைக்குள் நான் மரணமடையலாம்.
'அர்ஜுனர் வாழ்த்தினார்.' அன்று மாலையே கந்தர்வ
விதவையானாள்' என்ற அவப்பெயர் உங்களுக்கு வரக்கூடா
தென்று யோசிக்கிறேன்.''

''கந்தர்வருக்கு மரணம் உண்டோ?'' சுபத்திரை
வினவினாள்.

''உருமாற்றம் மரணம்தான் தாயே. உருமாறும்படி
நான் தண்டிக்கப்படலாம்.''



''தண்டிக்கப்படுவதா, யாரால்?''

''என்னிலும் வலிமை மிக்கவரால்.''

''எதற்கு தண்டனை?'' அர்ஜுனன் கேட்டான்.

''விதி. விதிவசத்தால் நான் செய்த பிழை.''

''என்ன பிழை செய்தீர்?'' சுபத்திரை கேட்டாள்.

அர்ஜுனரின் நாண் சற்று முன்பு அதிர்ந்தது.

''ஆமாம். பயிற்சி செய்தேன்.''

''அந்த அதிர்வுக்கு என் மனைவி பயந்தாள். நாங்கள் வானத்தில் சஞ்சரிக்க, என்னை இறுகத் தழுவிக் கொண்டாள்.''

''மனைவியைத் தழுவியதற்கா தண்டனை? வேடிக்கையாக இருக்கிறதே!'' அர்ஜுனன் கேலி செய்தான். சுபத்திரையைப் பார்த்து கண் சிமிட்டினான்.

''தழுவலில் ஒரு தவறு ஏற்பட்டுவிட்டது.''

''என்ன தவறு?''

''இவள் பயத்தில் தழுவுவதற்கு நான் கிறங்கிப்போய் இவளை முத்தமிட முயற்சி செய்தேன். மறுபடி நாண் அதிர்ந்தது. இவள் முகம் திருப்பிக் கொண்டாள். என் எச்சில் நழுவிக் கீழே விழுந்தது.''

''ஈஸ்வரா, பிறகு?'' சுபத்திரைக்கு லேசாய் ஒரு சங்கடம் ஏற்பட, அதிகம் விவரிக்காமல் விஷயம் சொல்லச் சொல்லி கட்டளையிட்டாள்.

''என் எச்சில் தரைநோக்கி விழுந்து உங்கள் எல்லைக் குள்ளிருக்கும் குளத்தில் குளித்து, அர்க்யம் செய்தவரின் கையில் விழுந்துவிட்டது. அந்த அர்க்யம் அசிங்கப்பட்டு விட்டது. அர்க்யமிட்டவர் என்னை நிமிர்ந்து பார்த்து நான் அடாது செய்ததாகக் கூறி 'இன்று மாலைக்குள் உன் தலை

என் காலில் விழு'மென்று சொல்லிவிட்டார். அந்தக் கவலையோடு இங்கு வந்தோம். நீங்கள் 'தீர்க்கசுமங்கலி பவ' என்று என் மனைவியை வாழ்த்துகின்றீர்கள். இன்று மாலை என் தலை தறிக்கப்படும். அது குறித்து கவலையில்லை. உங்கள் வாயால் என் மனைவியை 'தீர்க்கசுமங்கலி பவ' என்று சொல்லியிருக்கிறீர்கள். அரசர் சொல்லி இந்த இழிவுநிலை வந்துவிடக்கூடாதே என்று கவலைப்படுகிறேன்.''

''எவ்வளவு பெரிய தவறு இது?'' - சுபத்திரை சினந்தாள்.

''தவறுதான் அம்மா. மிகப் பெரிய தவறுதான். ஆனால், மனதால்கூட நான் இந்தத் தவறை நினைக்கவில்லை. கோயில் மீதோ, வேள்வி நடக்கும் இடத்திலோ பலி பீடங்கள் மீதோ நாங்கள் பறக்கவில்லை.''

''எச்சில் விழுவதைத் தடுக்க முயற்சி செய்யவில்லையா?''

''முயற்சித்தேன். இந்த படுபாவிப் பெண் நான் பயம் காட்ட விலகிக் கொண்டு ஓடுவதாய் நினைத்து என்னை இறுகப் பிடித்துக் கொண்டாள். என்னை நகர விடாது செய்து விட்டாள். அந்த விபரீதம் நிகழ்ந்து விட்டது.''

கந்தர்வன் கவலை தோய்ந்த குரலில் பேசினான்.

''சரி. இதுவரை வராத நீர் இன்று இங்கு வந்த காரணம்?''

அர்ஜுனன் கூர்மையாய் அவனைப் பார்த்தபடியே கேட்டான்.

''தலை உருளும் என்று சபதமிட்டவரை நீங்கள் சமாதானப்படுத்த வேண்டும். எனக்காகப் பேசி எனக்கு உயிர்ப்பிச்சையளிக்க வேண்டும். என் மனைவியின்



மாங்கல்யத்தை காக்க வேண்டும். அர்ஜுனா சரணம்; பல்குணா சரணம்! வில்லின் விஜயனே சரணம்.''

மறுபடியும் தம்பதிகள் காலில் விழுந்தார்கள். அர்ஜுனன் ஊஞ்சலில் தட்டி அவர்களை எழுந்திருக்கச் சொன்னான்.

''சபதமிட்டவர்களிடமே மன்னிப்புக் கேட்டிருக்கலாமே.''

''மன்னிப்பு கேட்பதற்குள் சபதமிட்டுவிட்டார். தரை தொடுவதற்குள் விலகி விரைந்து போய்விட்டார். மேலும் கருணையும் அன்பும் மிக்க இவரா என்மீது கோபப்பட்டு விட்டார் என்கிற திகைப்பில் நான் மயங்கிச் சுருண்டு விட்டேன்.''

''யாரது?'' அர்ஜுனன் கேள்விக்கு கந்தர்வர்கள் பேசாதிருந்தார்கள்.

''சொல்லுங்கள். யாரது?''

''உங்களை சரணடைந்திருக்கிறோம்.

''நாங்கள் அர்ஜுனா, வில்லில் சிறந்த நீர் எங்களை ஒருபோதும் கைவிடக் கூடாது.''

''யாரென்று சொல்லாமல் புலம்பினால் எப்படி?''

''நான் செய்தது தவறுதான் விஜயா. எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிப்பு கேட்க தயாரானேன். அறியாமல் செய்த பிழைக்கு இவ்வளவு பெரிய தண்டனை.'' கந்தர்வன் பேசமுடியாமல் தடுமாறினான்.

''அதிகம்தான் நான் பேசிப் பார்க்கிறேன்.''

''காப்பாற்றுவேன் என்று வாக்கு கொடும்.''

அர்ஜுனன் தயங்கினான். சுபத்திரை, அர்ஜுனனை வினோதமாகப் பார்த்தாள். ''ஏன் தயங்குகிறீர்கள்'' என்று கேட்டாள்.

''பெரிய தவறு செய்திருக்கிறார்களே.''

''உண்மை. ஆனால், வேண்டுமென்றே செய்யப்படவில்லையே, செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்க சித்தமாய் இருக்கிறார்களே. தெரிந்தே தவறு செய்வர்களுக்குத்தானே தண்டனை. எறும்பைக்கூட பிடித்து நசுக்கினால்தானே பாவம். காலில் மிதிப்புக்கெல்லாம் பாவக்கணக்கு உண்டெனில், இங்கு ஒருவர் எத்தனை பாவம் சுமக்க வேண்டும். எத்தனை தண்டனை பெற வேண்டும்.''

''அப்படி அறியாது செய்கிற பாவங்களுக்கு மன்னிப்பு கேட்பதுதானே மன்னிப்பு கேட்டு அர்க்கயம் விடுவது. என்னை அறியாது நான் செய்த பிழைக்கு வருத்தம் தெரிவித்துதானே சந்தியில் வந்தனம் செய்வது, இவர் பழியும் அதுபோல்தானே, இவரை மீறிய செயல்தானே. இதற்கு தலையை வெட்டுவேன் என்றால் இந்தக் கோபம் எப்படி நியாயம்?''

''இது அதிகம்தான் என்று சொல்லிவிட்டேனே.''

''சொன்னால் போதுமா, சபதமிட்டவருக்கு அறிவுறுத்த வேண்டாமா.''

''என் அறிவுரையைக் கேட்காது போனால்.''

''அப்போது அதற்கும் தண்டனை உண்டல்லவா? இந்திரப்ரஸ்தத்தில் இப்படி ஒரு அநியாய வழக்கு நடக்கலாமாவென்று தடுக்கலாமல்லவா, இதற்கெல்லாம் வாளை உருவி வன்முறை காட்டலாகாது என்று எச்சரிக்கலாமல்லவா?''

''யாரென்று தெரியவில்லையே.''

''யாராய் இருந்தாலென்ன, இது ஒரு வன்முறை வழக்கு. இந்த வன்முறை தடுத்தேயாக வேண்டும்.''



''அவர் என்னிலும் வலியராக இருந்தால்...?''

அர்ஜுனன், தன்னை மீறிப் பேசினான்.

''என்ன பேசுகிறீர்கள். உங்களிலும் வலியவரா, நீங்கள் சொல்லியும் வன்முறையில் ஈடுபடுபவரா? இங்கு அரசனும் பயந்தவனெனில் நீதி, நியாயம் என்னவாகும்?''

''இங்கு என்னிலும் வலியவர் தருமரும், பீமனும். நான் வலிமையென்பதை போர்த்திறன் வைத்து சொல்லவில்லை. நான் அவர்களுக்குக் கட்டுப்பட்டவன்.

''தருமரோ, பீமரோ சபதம் இடவில்லை அர்ஜுனரே!'' கந்தர்வன் பரபரத்து கூறினான்.

''பீமனே சபதமிட்டதாகத்தான் வைத்துக் கொள்ளலாமே. அப்போது சரி என்று சும்மா இருந்து விடுவதா? உங்களால் தடுக்க முடியாது என்று அநீதியை அனுமதிப்பதா? நீதி எல்லோருக்கும் பொதுவல்லவா. சிறிய தவறுக்கு மரணம்தான் தண்டனையெனில் நானும் நீங்களும் உட்பட எவரும் வாழ முடியாது. அதிகபட்சமாய் ஏதேனும், பிராயசித்தம் செய்யச் சொல்லுங்கள். நீங்கள் தென்திசைக்கு தீர்த்த யாத்திரை போனது ஒரு பிராயச்சித்தம்தானே. ஒரு தவறு செய்துவிட்டதால்தானே. உங்கள் தலையையா வாங்கிவிட்டார்கள். அதைக் காட்டிலும் இந்தத் தவறு சிறியதுதானே.''

சுபத்திரையின் பேச்சுக்கு அர்ஜுனன் சங்கடப்பட்டான். நல்லவேளை இது தருமரோ, பீமரோ இல்லை என்று நிம்மதியானான். இவர்களைவிட வலியவர்கள் இந்திரப்ரஸ்தத்தில் யாராய் இருப்பினும் இது அடாதது என்று முடிவு செய்தான். இதற்கு மேலும் யோசித்தால் சுபத்திரை கேலி செய்வாள் என்று எண்ணினான்.

''அவ்வளவுதானே. செய்தால் போயிற்று. தயவு செய்து அஸ்திரத்தைப் பின்னால் எடுத்துக் கொள். அர்ஜுனா! உன் அஸ்திரத்தையும் விலக்கு. அதன் வேகம் குறைத்து கீழே இறக்கு. உங்கள் கோபத்தால் ஊர் எரிகிறதே. பார்க்கவில்லையா?''

''நான் அடைக்கலம் கொடுத்திருக்கிறேன் அந்த கந்தர்வனுக்கு. அவன் தலையைத் துண்டித்துத் தரையில் உருட்ட எவரையும் அனுமதிக்க முடியாது.''

''துண்டித்து உருட்ட வேண்டுமென்று சபதமில்லையே அப்பா.'' நாரதர் கத்தினார்.

''என்ன?'' அர்ஜுனன் வினவினான்.

''கிருஷ்ணர் இன்று மாலைக்குள் தன் காலடியில் அவன் தலை உருள வேண்டுமென்றுதானே சொன்னார். உருள வைத்தால் போயிற்று. அந்த கந்தர்வனைக் கூப்பிடு-அடேய் இங்கு வா'' – உள் நோக்கி கூவினார். கந்தர்வன் பயத்துடன் வெளியே வந்தான். அவன் தோளைப் பற்றி இழுத்துக் கொண்டு நாரதர், கிருஷ்ணனிடம் போனார். அந்த கந்தர்வனுக்குத் துணையாக அர்ஜுனன் உருவிய வாளோடு போனான். பின்னே கந்தர்வி ஓடினாள். அவளுக்குத் துணையாய் சுபத்திரை பின்தொடர்ந்தாள்.

''கிருஷ்ணா, இந்த கந்தர்வனின் தலை உன் காலடியில் உருள வேண்டும். அவ்வளவுதானே?''

''அவ்வளவுதான்.'' கிருஷ்ணன் முகத்தில் விஷமம் கொப்பளித்தது

''அடேய், செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டு இவர் காலில் விழு. என் வினையெல்லாம் போகட்டும் என்று கும்பிடு.'' நாரதர் கட்டளையிட்டார்.



கந்தர்வன் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தான். கந்தர்வியும் பணிந்தாள். ''உருளவில்லையே.'' கிருஷ்ணன் சிரித்தான்.

''உருட்டிவிடலாம். அம்மா கந்தர்வி எல்லாவற்றிற்கும் மூல காரணமான நீ எழுந்து உன் புருஷனை உருட்டு. உன் புருஷனின் தலை கிருஷ்ணனை நோக்கி இருக்கும்படி செய்து, கிருஷ்ணனைச் சுற்றி பிரதட்சணமாக உருட்டிப் போடு. உருளுதண்டம் போடு'' நாரதர் உற்சாகமாயக் கூவினார்.

மனைவி உருட்டிவிட, கந்தர்வன் எல்லாம் அறிந்த கிருஷ்ணனை மனித ரூபமான அந்தப் பரம்பொருளை வலம் வந்தான். மனமார தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டான். கிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தார்.

''போதும் எழுந்திரு'' என்று அவனைத் தூக்கி விட்டார்.

''பகலில் கூடல் பாபம் விளைக்கும். இனிஅவ்விதம் செய்யாதே. போய் வா'' என்றார். கந்தர்வி அவர் தாள் பணிய, ''புருஷனை, வீரனாய் விவேகனாய் ஆக்குவது மனைவியின் கடமை. போகமாக்குவது அல்ல, இதைப் புரிந்து கொள். போய் வா. தீர்க்க சுமங்கலியாய் இரு'' என்று ஆசீர்வதித்தார். அவர்கள் அர்ஜுனனை நோக்கி வந்தார்கள். ''என் தெய்வமே'' என்று கந்தர்வி அவன் காலைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

''நான் தெய்வமில்லையம்மா, நான் ஒரு கருவி தெய்வத்தின் கருவி. என்னைச் சோதிக்க உன்னைத் தூண்டிவிட்டு ஏதோ ஒரு விளையாட்டு நிகழ்ந்திருக்கிறது. என்னவென்று எனக்கும் புரியவில்லை. எதனாலென்று எனக்குத் தெரியவில்லை. தன்னைச் சுற்றி நடப்பது பற்றித்

தெரியாதவன் தெய்வமாக முடியுமா? நான் சாதாரணன். வெறும் மனிதன். உனக்கு என் நமஸ்காரம். போய் வா.''

விடை கொடுத்தான். நாணி தன் நாண் தளர விட்டான். காண்டீபத்தைக் தரையில் ஊன்றி சோர்வாக நின்றான்.

''நீ சாதாரணனில்லை அர்ஜுனா, அசாதாரணன். அற்புதமான வில் வீரன். உனக்கு ஒப்பாரும் மிக்காரும் இவ்வுலகில் இல்லை. உன் எதிரே வில்லெடுத்து வெற்றி பெறப்போகிறவர் எவருமில்லை. என் சரங்களையே தடுக்க முடிந்த உன்னால் எவர் சரத்தையும் எதிர்கொண்டு நிறுத்த முடியும். தர்மத்தைக் காக்க இத்தனை துணிவோடு செயல்படுகிற உன்னால் இங்கே அற்புதங்களைச் செய்ய முடியும்.

அண்ணன் உதவியுடன் புருஷன் தன்னைத் தாக்கி வந்தான் என்கிற அலட்சியம் சுபத்திரைக்கு வந்துவிடக் கூடாதென்பதனாலேயே, அவளுக்குத் தன் புருஷனின் பராக்கிரமத்தைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையை நிறைவேற்றவேண்டுமென்றே இந்த விளையாட்டு யுத்தம் செய்தேன். போர் என்று வந்துவிட்டால் நட்போ, உறவோ இல்லை. தர்மத்தின் பொருட்டு எவரை வேண்டுமானாலும் எதிரியாகக் கொள்ளலாம். எவரை வேண்டுமானாலும் அழிக்கத் துணியலாம். தர்மமே முக்கியம். உறவுகளோ, நட்புகளோ அல்ல என்பது உனக்குத் தெரிந்திருக்கிறதா என்று சோதனை செய்து பார்த்தேன். உறவுக்கிலேசம் உன்னை அதர்மவானாக மாற்றிவிடக் கூடாது நண்பனே. உன்னிலும் உயர்ந்தது உன் தர்மம். அதன் பொருட்டு நீ யுத்தம் செய்தது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. வா, வந்து என்னைத் தழுவிக்கொள்.'' கிருஷ்ணன் வில்லை கீழே வைத்துவிட்டு கையை விரித்தான். அர்ஜுனன் காண்டீபத்



தோடு கிருஷ்ணரைத் தழுவிக் கொண்டான். அஸ்திரங்கள் அதனதன் அம்புறாத்துணிக்குள் புகுந்தன. ஊர் குலவை யிட்டு நண்பர்களை வாழ்த்தியது.

''சுபத்திரை! உன் புருஷனுடைய வீரம் எப்படி? அவன் வில் வித்தை எப்படி?'' – கிருஷ்ணர் கேட்க, சுபத்திரை பிரியத்துடன் புருஷனின் கையைக் கோத்துக் கொண்டாள். யுத்தத்தில் ஏற்பட்ட அவன் காயங்களைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்தாள். அண்ணாவின் கைப்பற்றி வேகமாக இழுத்து புருஷனோடு அரண்மனைக்குள் போனாள். சுற்றிச் சுற்றி ஓடிவந்து புருஷனையும், அண்ணனையும் உபசரித்தாள். அவ்வப்போது அவள் கண்ட யுத்தத்தை பேசி வியந்தாள். தர்மரும் பீமனும், நகுல சகாதேவர்களும் புருஷனையும் அண்ணனையும் புகழ்வதைக் காதுகுளிரக் கேட்டாள். நெஞ்சுக்குள்ளே இருவரையும் அருகருகே வைத்து வணங்கினாள்.

விருந்து முடிந்து இளைப்பாறி விடைபெற்று, தேர் ஏறி கிருஷ்ணர் இருட்டு நேரத்தில் துவாரகை நோக்கிப் புறப்பட, பின்னால் தொடர்ந்த ஒரு தேர் முன்னேறி கிருஷ்ணர் தேரை மறித்தது. சகாதேவன் தேர்விட்டு இறங்காது கிருஷ்ணனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன சகாதேவா! ஏதும் பேச வேண்டுமா?''- கிருஷ்ணர் வாஞ்சையுடன் கேட்டார்.

''நீ பேசு'' - சகாதேவன், கிருஷ்ணரை ஒருமையில் அதட்டினான்.

''என்ன பேசுவது?''

''எதற்கு இந்த யுத்த நாடகம்? எது குறித்து இந்த வீர விளையாட்டு? எனக்குச் சொல்லிவிட்டுப் போ.''

''மறுத்தால்?'' கிருஷ்ணன் கண்மூடி வினவினார்.

‘‘உன்னோடு யுத்தம் செய்வேன். என் யுத்தம் எது வென்று உனக்குத் தெரியும் கிருஷ்ணா! உன்னைக் கட்டிப் போடுவேன். உன்னைக் கட்ட என்னால் முடியும் என்று உனக்குத் தெரியும் கிருஷ்ணா. உண்மையைச் சொல், எதற்கு இந்த நாடகம்?’’ - சகாதேவன் மீண்டும் அதட்டினான்.

‘‘உண்மையான யுத்தம் வரப்போகிறது சகாதேவா. வெகுவிரைவில் வரப்போகிறது.’’

‘‘யாருக்கும், யாருக்கும்?’’

‘‘உனக்கே தெரியும்.’’

‘‘சரி, நீ அங்கே என்ன செய்வதாய் உத்தேசம்?’’

‘‘ஒரு உத்தேசமுமில்லை. ஒரு ஓரமாய் நின்று வேடிக்கை பார்ப்பேன்.’’

‘‘ஏன், இரண்டு பக்கமும் அதர்மமுள்ள யுத்தமா அது?’’

‘‘இல்லை, தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் உள்ள யுத்தம்.’’

‘‘அப்படியானால் நீ எந்தப் பக்கம்.’’

‘‘உங்கள் பக்கம் சகாதேவா.’’

‘‘சத்தியம் செய்.’’

‘‘என்னவென்று...’’ கிருஷ்ணர் கண்விழித்து அவனை உறுத்துப் பார்த்தார்.

‘‘நாங்கள் இந்த பஞ்ச பாண்டவர்கள் தர்மத்தின் பக்கமே எந்நாளும் நிற்க வேண்டும். அதற்குத் துணையாய் நான் இருப்பேன் என்று சத்தியம் செய். அதர்ம வழியில் எங்கள் மனசுகூட போகாமலிருக்க உன்னால் முடிந்த தெல்லாம் செய். எங்களை தர்மத்தின் பக்கமே இழுத்துக் கொண்டு போவேன் என்று சத்தியம் செய். ஒரு நாளும் அதர்மத்தின் பக்கம் போகவிட மாட்டேன் என்று உறுதி கொடு. எங்களை தீதிலிருந்து காப்பாற்று கண்ணா.’’



கிருஷ்ணன் மெலியதாய் சகாதேவனை நோக்கி, வாஞ்சையுடன் புன்னகை செய்தான்.

‘‘சகாதேவா! ஞானியிலும் சிறந்த ஞானியே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் இன்று பேசியது பிரபஞ்ச ரகசியம். இதை எவரிடமும் சொல்லாதே. தர்மம் காக்கவே நான் உங்களோடு சேர்ந்திருக்கிறேன். உங்களை என் பக்கம் எடுத்திருக்கிறேன், அதர்மத்தை அழிப்பது என் வேலை. சகாதேவா, நீ சும்மா இரு.’’

‘‘சும்மா இரு என்றால் யுத்தம் செய்யாதே என்று என்னைத் தடுக்கிறாயா? விலகியிருக்கச் சொல்கிறாயா?’’

‘‘யுத்தம் செய். சும்மாயிரு.’’

கண்ணன் கை தூக்கி சகாதேவனை ஆசீர்வதித்தான். தன் கண்களால் அவன் கண்களை உறுத்து நோக்கினான். சகாதேவனுக்குப் புரிந்தது, அந்தி சரிந்து மேல் வானத்தின் கடைசி சிகப்பு ரேகை மறையும் நேரத்தில் சகாதேவன் மனசு கூட்டி கிருஷ்ணனை வணங்கினான். வலம் வந்தான். வழி விட்டு நின்றுகொண்டான்.

கிருஷ்ணன் தேர் புறப்பட, எங்கும் இருள் சூழ்ந்தது. சகாதேவன் ஊர் எல்லையில் அந்தக் குளத்து விளிம்பில் பெருமூச்சோடு உட்கார்ந்தான். கண்மூடி தியானத்தில் ஆழ்ந்தான்

யுத்தம் வரும் என்பது அவன் உள்மனதிற்குத் தெரிந்து விட்டது. எந்த சலனமுமின்றி அதற்குத் தயாராய் இருந்தான்.

முற்றும்

“கந்தர்வர்களே! நான் உங்களுக்கு அடைக்கலம்
தருகிறேன்.என்னை மீறி உங்களைத் தண்டிக்க முற்பட்டால்
என் காண்டீபம் சும்மா இராது. சரணம் என்று வந்தவனைப்
பாதுகாக்க வேண்டியது வீரனின் கடமை. உங்கள் பேச்சு
உண்மையானதாகவே எனக்குத் தோன்றுகிறது. இருப்பினும்
உங்கள் எதிரியின் வாதமும் கேட்க வேண்டும். உங்கள்
கூற்று உண்மைதானே.”

“ஈஸ்வர சத்தியமாய் நாங்கள் பேசியதெல்லாம்
உண்மை!” இருவரும் ஆணையிட்டார்கள்.

“சம்பந்தப்பட்டவரிடம் மன்னிப்பு கேட்க சித்தமாய்
இருக்கிறீர்களா?”

“மன்னிப்பு கேட்பது மட்டுமில்லை. பிராயச்சித்தம்
செய்யவும் தயாராக இருக்கிறோம்.”

“என்ன பிராயச்சித்தம் வேண்டுமானாலும் செய்யத்
தயாராக இருக்கிறேன் அரசே!” கந்தர்வி விசும்பினாள்.
“என்னால் ஏற்பட்ட இந்தத் தவறுக்கு என் கணவரைப்
பிரிந்து தவ வாழ்க்கை மேற்கொள்ளவும் தயாராக
இருக்கிறேன். ஆனால், இவரை இழந்து விதவையாக வாழ
என் மனம் ஒப்பவில்லை. எனக்கு மாங்கல்ய பிச்சை
கொடுங்கள் விஜயனே!” கதறி அழுதாள்.

“தந்தேன்.” அர்ஜுனன் வலக்கையை உயர்த்தினான்.
அந்தப் பெண்ணின் அழுகைக்கு உணர்ச்சிவசப்பட்டான்.

“இந்த அர்ஜுனன் உயிரோடு இருக்கும் வரை உன்
புருஷன் மீது ஒரு துரும்புகூடப் படாது. உன் புருஷனை
தண்டிக்க அந்தக் கடவுளே வந்தாலும் நடக்காது. என்
கையில் தனுசு உண்டு. காண்டீபம் அதற்குப் பெயர்.”
எழுந்து நின்று உரக்கக் கூவினான். சுபத்திரை புருஷனின்
வீரம் கண்டு மகிழ்ந்தாள். மேலே இடி முழக்கம் கேட்டது.



வல்லூறுகள் சுற்றிச் சுற்றி பறந்தன. கறவைகள் கால்மாற்றிக்
கத்தின. பூமியில் புழுதி சுழன்று தூணாய் அந்த ஊரில்
அலைந்தது.

“யார் சாபமிட்டார்கள் என்று கேட்கவில்லையே.”
சுபத்திரை ஞாபகப்படுத்தினாள்.

“யாதவர்கள் தலைவன் கிருஷ்ணன்.”

கந்தர்வன் மெல்லிய குரலில் கூறினான். நின்று கை
உயர்த்தி வாக்கு கொடுத்த அர்ஜுனன் மறுபடியும்
ஊஞ்சலில் உட்கார்ந்தான். மெல்ல ஆடத்தொடங்கினான்.

## 5

“கிருஷ்ணரா, என் அண்ணனா, பலராமர்
தம்பியான கிருஷ்ணர்தானே. அவரா சாபமிட்டார். அவரா
கோபம் கொண்டார். அவரா இன்று மாலைக்குள் உன் தலை
தன் காலடியில் விழும் என்று வெஞ்சினம் பேசினார்.
ஆச்சர்யமாக இருக்கிறது. அட, கந்தர்வி. நீ கவலையை விடு.
நான் யாரோ, எவரோ என்று பயந்து போய்விட்டேன்.
அண்ணா இங்கு வருவார். நான் ஒரு அதட்டுப் போட்டு
ஒழுங்காய் விருந்துண்டு ஊருக்குப் போய்ச் சேரென்று
சொல்கிறேன்.” சுபத்திரையின் குரலில் குதூகலம் வழிந்தது.

“என் அண்ணா கிருஷ்ணன் இருக்கிறானே, அவன்
பிறவி நடிகன். யாரையாவது எதாவது சொல்லி கலவரப்
படுத்திக்கொண்டேயிருக்க வேண்டும் அவனுக்கு. அதிலும்
யார்மீது பிரியம் அதிகம் உண்டோ அவர்களைக் கலவரப்
படுத்துவதில் ஒரு தனி ஆனந்தம் அவனுக்கு.
கிருஷ்ணனுக்கு உங்களைப் பார்த்ததும் பிடித்துப் போயிருக்க

வேண்டும். உங்களை ஸ்நேகமாக்கிக் கொள்ள இது ஒரு உபாயம். அவனையே நீங்கள் சுற்றிச் சுற்றி கொண்டாட வேண்டுமென்று ஒரு எண்ணம்.

கிருஷ்ணன் மிக நல்லவன் கந்தர்வி. அற்புதமான பிறவி. கொஞ்சம் குறும்புத்தனம் அதிகம். நல்லவர்களை அழ வைத்துப பார்ப்பதில் விருப்பம். அழ அழத்தான் மனசு சுத்தமாகும் என்பது அவன் எண்ணம். நிச்சயம் இது பொய்க் கோபம். கிருஷ்ணனுக்கு கோபமே வராது. அவன் கோபம் தாண்டியவன். குணக்குன்று. வாரி வாரி வழங்கும் வள்ளல். தனக்கென்று எதுவும் கொள்ளாதவன். மறுபடி சொல்கிறேன். இது ஏதோ நாடகம். இங்கு வந்ததும் உங்கள் பயத்தைப் பார்த்துவிட்டு, வாய்விட்டு கலகலவென்று சிரிப்பான் பாரேன்.

'நானா, அப்படிச் சாபமிட்டேனா? இல்லையே' என்று சொல்வான் பாரேன். இதற்கே பயந்துவிட்டாயே, துவாரகையிலுள்ள கோபியர்களை அவன் என்ன பாடு படுத்தியிருக்கிறான் தெரியுமா? நீங்கள் அழுவது பார்த்து விட்டு நானும் பயந்துவிட்டேன். இதற்குப் போய் அர்ஜுனரைக் கலவரப்படுத்திவிட்டீர்களே. இதை நானே சமாளித்திருப்பேன். உள்ளே வாருங்கள். உங்கள் வாழ்க்கையைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்.''

கந்தர்வர்களை உள்கூடத்திற்கு அழைத்துப் போய் சுபத்திரை உபசரித்தாள். அர்ஜுனன் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் ஏனோ கலவரமானான். அம்புறாத்துணியை எடுத்து சரங்களைப் பரிசோதிக்கத் தொடங்கினான். வாசலில் தேர் சப்தம் கேட்டது.

யாரோ கைதட்டி உள்ளே இருப்பவர்களை வெளியே அழைக்கும் சப்தம் கேட்டது. வாயிற்காவலர்கள் உள்ளே



ஓடிவந்தார்கள். கிருஷ்ணன் தேரில் நின்றபடி கை தட்டி உள்ளிருப்பவரை அழைப்பதாகச் சொன்னார்கள்.

விருந்தினரை இப்படி அழைப்பது வழக்கமில்லை. அப்படியானால் கிருஷ்ணன் விருந்துக்கு வரவில்லை. அர்ஜுனனை 'வெளியே வா' என்று அழைக்கிறான். எதுவாயினும் ஒருவேளை கிருஷ்ணன் கோபமாக இருப்பினும் அவன் கோபம் தணிக்கும்படி அடக்கமாகவே பேசவேண்டுமென்று அர்ஜுனன் நினைத்துக் கொண்டான்.

கிருஷ்ணனை வரவேற்க வாசலுக்கு ஓடினான். கை கூப்பி தெருவில் தேர்மீது நின்ற கிருஷ்ணனை நமஸ்கரித்தான். ''வரவேண்டும். வரவேண்டும்'' என்று உபசரித்தான்.

''வந்தேன். நலமா அர்ஜுனா?''

''மிக்க நலம். சுபத்திரையும் சௌக்கியம். என்ன வாசலில் நின்றபடியே பேசுகிறாய். உள்ளே வா.''

''ஒரு ஆளைத் தேடிக்கொண்டிருக்கிறேன் அர்ஜுனா! அவனோடு வழக்கொன்று இருக்கிறது.''

''கந்தர்வனா?''

''ஆமாம். உனக்கெப்படி தெரியும்.''

''உன் மீது ஏதோ எச்சில் துப்பிவிட்டானாமே.''

''என்மீது துப்பியிருந்தாலும் பரவாயில்லை. துடைத்துக் கொண்டிருப்பேன். எடுத்த அர்க்யத்தில் எச்சில் துப்பினான், அந்த அயோக்யன்.''

''சரி.சரி. எதற்கு இந்த கோபம். ஒரு சாதாரண கந்தர்வனோடு என்ன சண்டை. வந்து பசியாறு. சுபத்திரை காத்திருக்கிறாள்.''

''பசியில்லை. தர்மர் அகத்தில் சாப்பிட்டு விட்டேன். அந்தச் சண்டாளன் விஷயத்தை முடித்துவிட்டு உங்கள் வீட்டிற்கு வருகிறேன்.''

''நீ கூட பதற்றமாய் பேசினால் எப்படி'' அர்ஜுனன், கிருஷ்ணனின் கோபத்தை தணிக்க முயன்றான்.

''நான்கூட என்றால், நான் என்ன மரமா, விலங்கா பறவையா, மனைவியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு என் மீது எச்சில் துப்புகிறானே, என்ன திமிர் அவனுக்கு. அதைத் தடுக்கக் கூட முடியாமல் அவள் அணைப்பிலேயே கிறங்கிக் கிடக்கிறானே. என்ன அகம்பாவம். இதுசரி, நான் பறவை, மரம், விலங்கு, இதற்குக் கூட இப்படியொரு அவமதிப்பு நிகழலாமா. பூமியில் எச்சில் துப்புவது பாவம் இல்லையா, வெற்றிலை எச்சிலைக்கூட பாத்திரத்தில் ஏந்தியல்லவா விடவேண்டும். பூஜை செய்கிறவன் தலையில் எச்சில் துப்புவது இந்திரப்ரஸ்தத்தின் இயல்பா? இது உத்தமம் என்ற சட்டமா?''

''கிருஷ்ணா கோபம் குறை?'' அர்ஜுனன் கைகூப்பி னான்.

''நீ எதற்கு கைகூப்பிகிறாய், அர்ஜுனா. அவன் உன் குடிமகன் அல்லவே. உன் குடிமகனாக இருந்தால் உன்னிடம் வந்து சொல்லியிருப்பேனே, சொன்னால் அர்ஜுனனுக்குக் கோபம் வரும். கடுமையாகத் தண்டிப்பான் என்று சொல்லாது மன்னித்திருப்பேனே.''

''அவன் என் குடிமகன் அல்ல. கந்தர்வன்.''

''எவனாயிருப்பின் எனக்கென்ன? இந்த அவமதிப்பை நான் ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும். நீ எதற்கு அவனுக்குப் பரிந்து பேசுகிறாய்.'' கிருஷ்ணன் சீறினான்.



''அது தெரியாமல் செய்த தவறு.''

''நல்ல கதை அர்ஜுனா, நான்கூட உன்னைப் பளீரென்று அறைந்துவிட்டு தெரியாமல் செய்தேன் என்று சொல்லிவிடலாம். இந்த தேசத்துப் பெண் மக்கள் பிறபுருஷனிடம் மனம் வைத்துவிட்டுத் தெரியாமல் நிகழ்ந்தது என்று சொல்லிவிடலாம்.கோவில் பூஜை மறந்து விடலாம். மன்னிக்கப்படலாம். யாகசாலையில் குடித்து விட்டுக்கூட ஆடலாம். இது தவறில்லை என்று சொல்லி விடலாம். நன்றாக இருக்கிறது உங்கள் ஆட்சி.''

''கிருஷ்ணா! நீ அதிகம் பேசுகிறாய்.''

''நீ பேச வைக்கிறாய் அர்ஜுனா. கந்தர்வனுக்கும் இந்த தேசத்திற்கும் சம்பந்தமில்லை. அப்படியெனில், விலகி நில். நீ எதற்கு உன் பரிந்துரையை வீணாக்குகிறாய். ஏன் ஒரு அயோக்கியனுக்குப் பரிந்துரை செய்கிறாய்?''

''அதற்கொரு காரணமிருக்கிறது கிருஷ்ணா.''

''என்ன காரணம்?''

''நான் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக் கிறேன்.''

''இது தவறில்லையா? அர்ஜுனா! அயோக்கியர் களுக்கு அரசன் அடைக்கலம் தரலாமா? அர்ஜுனன் தர்மம் தவறி நடக்கலாமா?''

''நடந்ததை நான் விளக்கமாகச் சொல்கிறேன். அமைதியாகக் கேள் கிருஷ்ணா.''

''நடந்ததைக் கண்டவன் நான். காதால் கேட்டவன் நீ. நீ எனக்கு விளக்கம் சொல்கிறாயா. என்ன கேலிக்கூத்து இது.'' கிருஷ்ணன் கண்கள் வெறுப்பில் சுருங்கின.

''கண்ணா! கண்ணால் பார்ப்பதும் பொய். காதால் கேட்பதும் பொய்.''

''மறுபடியும் சொல்.''

''கண்ணால் பார்ப்பதும் பொய். காதால் கேட்பதும் பொய்.''

''மாயாதத்துவம் பேசுகிறாயா அர்ஜுனா?''

''இல்லை கண்ணா, தத்துவத்தை உன்னிடம் பேச முடியுமா? என்னிலும் பெரியவன் நீ, எல்லாம் அறிந்தவன் நீ. அன்பே உருவான ஸ்நேகிதன் நீ. அடாது செய்பவர்களையும் மன்னிக்கும் மனப்பான்மை உடையவன் நீ. எச்சரித்தும் கேட்காமல் போனால்தான் தண்டிக்கலாம் என்று நீதி சாஸ்திரம் சொல்கிறது. எடுத்த உடனேயே தண்டிக்க உனக்கு என்ன அதிகாரம்?''

''அர்ஜுனா.''

கிருஷ்ணனின் குதிரைகள் முன்னும் பின்னும் அலைந்தன. தெருவில் கூட்டம் கூடியது. தருமனுக்கும் பீமனுக்கும் செய்தி போயிற்று. சுபத்திரை வாசலுக்கு ஓடிவந்தாள். கந்தர்வர்கள் கிருஷ்ணனின் குரல் கேட்டு நடுங்கினார்கள்.

''என் அதிகாரம் பற்றி பேசுகிறாயா, வல்லவனுக்கு வாள் உருவிய இடமெல்லாம் அதிகாரம்தான். தோள் பலம் உடையவனுக்குச் சென்ற இடமெல்லாம் வெற்றிக் கொடிதான். அடக்கமாய் பேசு.''

''உன்னுடைய அடக்கம் காணாமல் போய்விட்டதே என்றுதான் கவலைப்படுகிறேன் கண்ணா. நான் என்ன மடுவிலுள்ள பாம்பா, பெண்களுக்கு முன்னே வழக்கமாய் வீரம் காட்டுவாயே. அதை என்னிடமும் காட்டப் பார்க்கிறாயா? தேரில் நின்றபடியே பேசுகிறாயே. இது இந்திர ப்ரஸ்தத்து அரசனை, அவன் அரசாங்கத்தை, அவன் குடிமக்களை அவமதிப்பது போல் ஆகாதா?''



''ஆம், பேசுகிறேன். என்ன செய்வாய்?'' கிருஷ்ணன் இடுப்பில் கையூன்றி கோபமாய் வெறித்துப் பார்த்தான்.

''இந்த தேசத்துச் சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. நான் உன்னையும் தண்டிக்க நேரும்.''

''என்ன சொன்னாய். என்னையும் தண்டிப்பதா? யாரிடம் பேசுகிறாய் என்பதை மறந்துவிட்டாயா? சுபத்திரைக்கு முன்னால் வில்வித்தை காட்டத் துள்ளிக் குதிக்கிறாயா? இன்னமும் உன்னை நண்பன் என்று கருதுகிறேன் அர்ஜுனா. நாவடக்கம் முக்கியம்.''

''நானும் நட்பின் பெயராலேயே உன் அவமதிப்பை சகித்துக் கொள்கிறேன் கண்ணா. அந்த கந்தர்வனை மன்னிப்புக் கேட்கச் சொல்கிறேன்.''

''நிச்சயம் அவனை மன்னித்திருப்பேன். என்னிடம் நேரே வந்திருந்தால் அவனை எச்சரித்து அனுப்பியிருப்பேன். எச்சிலைத் தடுக்கவும் முடியாமல் உன்னிடம் அடைக்கலம் கேட்டு உன்னைத் தூண்டி விடுகிறானல்லவா? அதன் பொருட்டே அவன் தண்டிக்கப்பட வேண்டும். அவன் தலை இன்று மாலைக்குள் என் காலடியில் நிச்சயம் உருளும்.''

''அது உன்னால் இயலாது கண்ணா.''

''ஏன் இயலாது?''

''அவன் என் வீட்டில் நான் அடைக்கலம் கொடுத்த நண்பனாய் தன் மனைவியோடு இருக்கிறான். அவனை அணுகுவதற்கு நீ என்னை தாண்டியாக வேண்டும்.''

''உன்னைத் தாண்டிப் போக என்னால் இயலாதா?''

''நான் உன்னைத் தடுப்பேன் கண்ணா,''

''நீ தடுத்தால் நான் நின்றுவிடுவேனா?''

''உன்னை நிற்க வைக்க என்னால் முடியும் கிருஷ்ணா!''

''முப்பத்து முக்கோடி தேவர்களாலும் முடியாது. கந்தர்வர்கள், யக்ஷர்கள், அசுரர்கள், இவர்களாலும் இயலாது. அந்த ஈஸ்வரனாலும், பிரம்மனாலும் என்னைத் தடுக்க முடியாது.''

''என்னால் முடியும் கிருஷ்ணா.''

''முட்டாளே! நீ யாரோடு மோதுகிறாய் என்பதைப் புரிந்து கொள்.''

''நீயே எல்லாமுமாய் ஆகுக. எங்கும் நிறைந்த பரப்ரும்மமே நீ என்பதாய் நான் இப்போது உணர்ந்தாலும் அல்லது பின்னொரு நாள் உணர்ந்தாலும் இன்று இங்கே உன்னை நான் அனுமதிக்க மாட்டேன். ஒரு பாவமும் அறியாத அந்த கந்தர்வனை நீ தண்டிக்க நான் விட மாட்டேன்.''

''காரணமின்றி என்னோடு மோதுகிறாய்.''

''இதுவே நான் உன்மீது சொல்லும் குற்றச்சாட்டு.''

''அந்த கந்தர்வனை என்னிடம் ஒப்படைத்துவிடு. உன்னோடு போர்புரிய எனக்கு விருப்பமில்லை.''

''எனக்கும் விருப்பமில்லை கண்ணா. ஆனால் உயிர் போனாலும் நான் உன்னிடம் ஒப்படைக்க மாட்டேன். உன் கையால் இந்த அர்ஜுனன் மரணமடைவானே தவிர, கொடுத்த வாக்கை அர்ஜுனன் மீறமாட்டான். அடைக்கலம் கொடுத்தவருக்கு துரோகம் செய்யமாட்டான். இது காண்டீபத்தின் மீது ஆணை.''

''அது அறியாது கொடுத்த வாக்கே.''

''வாக்கு எவ்விதமாயினும் வாக்கே.''



''அப்போது யுத்தமே வழி.''

''எனக்கு அச்சமில்லை.''

''என் திறன் நீ அறியாத விஷயம்.''

''அதையே நான் உனக்கும் சொல்லிக் கொள்கிறேன்.''

''அதையே நான் உனக்கும் சொல்லிக் கொள்கிறேன்.''

''அதையே நான் உனக்கும் சொல்லிக் கொள்கிறேன்.''

''நான் வில்லெடுத்து வரும் வரை பொறுமையாக இருக்க வேண்டும்.''

''அது உனக்கு வில். எனக்கு வைக்கோல்.''

''அதைச் சரம் தொடுத்த பிறகு சொல். இப்போது அவசரப்படாதே.''

அர்ஜுனன் உள்ளே ஓடினான். காண்டீபத்தைக் கும்பிட்டுக் கையிலெடுத்தான். வளைந்து நாணேற்றினான். கவசம் பூண்டான். அம்புறாத்துணியைத் தோளில் பூட்டினான். உள்ளே ஆயர்பாடியில் பசுவின் மீது சாய்ந்து ராதை அருகேயிருக்க, குழலூதும் கண்ணனை மனமுருக தியானித்தான்.

'நான் மனம் குவிக்கின் உன் மந்தகாச உருவமே இங்கு வருகிறது. நான் இறையே என்று விளிக்க, உன் இருப்பே என் நெஞ்சில் தோன்றுகிறது. நீ ஞானி! அதிசயப் பிறவி! தருமத்தின் தலைவன்! எல்லாம் கடந்த கடவுள்! நீயே அது என்பதாய் ஆகுக. எங்கும் பரவிய பரப்பிரும்ம சொரூபமே நீ என்பதாய் ஆனாலும் தர்மத்தின் பொருட்டு இக் காண்டீபம் எடுக்கிறேன். இக்காண்டீபம் தோற்றால் தர்மம் தோற்றதாய் ஆகும். தர்மம் என்றும் தோற்காது. எந்த யுகத்திலும் தர்மம் தோற்றதாய் சரித்திரம் இல்லை. தர்மமே வெல்லும்.''

உள்ளேயுள்ள கிருஷ்ணனை வணங்கினான். கந்தர்வர்கள் சுவரோரம் நின்று கண்கலங்கினார்கள். அர்ஜுனனை நோக்கிக் கும்பிட்டார்கள். அர்ஜுனன், அவர்களை நோக்கி கையுயர்த்தினான். ஆசீர்வதித்தான். 'அஞ்சேல்' என்று சொன்னான். அப்புறாத்துணியுடன். வாசலுக்கு வந்தான்.

காண்டீபத்தில் நாண் இழுத்துக் கட்டினான். கிருஷ்ணனின் குதிரைகள் மிரண்டன; பின்னடைந்தன.



கிருஷ்ணர் அம்போடு தயாராக இருந்தார். வில்லில் தொடுத்தார். குதிரைகளை முன்னே விரட்டினார். முதல் அம்பு அர்ஜுனன் தோளை உரசி, பின்னால் நின்ற சுபத்திரையின் தலையைக் கோதி, கதவை அடித்துக் குலுங்க வைத்து எதிரே அர்ஜுனன் காலடியில் விழுந்தது. அர்ஜுனன் பேசாதிருந்தான். அடுத்த அம்பு அர்ஜுனனைச் சுற்றிக் கொண்டு சுபத்திரையின் அருகே போய் விழுந்தது. சுபத்திரை அலறிக் கொண்டு உள்ளே ஓடினாள். அர்ஜுனன் தன் காண்டீபத்தில் சரம் பூட்டினான், காத்திருந்தான். இந்த முறை அம்பு காண்டீபத்தை நோக்கி வர, அர்ஜுனன் அதைக் காண்டீபத்தால் தட்டிப் புரட்ட, அம்பு அரண்மனைக் குள்ளே போய் கந்தர்வன் அருகே நின்ற தூணை இடித்தது. கந்தர்வி 'அபயம் அபயம்' என்று அலறினாள். அர்ஜுனன் சீற்றமானான். சரம் தொடுத்த கிருஷ்ணன் தேரை அடித்தான். தேர் குலுங்கியது. குதிரைகள் எகிறி கனைத்தன. இன்னொரு அம்பு சக்கரத்தை முன்னேறவிடாமல் மறித்துக் கொண்டது. மூன்றாவது அம்பு கிருஷ்ணனின் மயிர் பீலியைக் கொய்துகொண்டு போயிற்று. கிருஷ்ணன் உக்கிரமானார். அர்ஜுனன், நெஞ்சுக்கு குறி வைத்து அடித்தார். இடைவிடாது சரமழை பொழிந்தார். அத்தனையும் தடுக்கப்பட்டன. மாளிகையின் முன்பக்கம் கடும் சேதமாயிற்று. தருமரும், பீமரும், நகுலரும், சகாதேவரும், குந்தியும் தேர்களில் விரைந்து வந்தார்கள். அர்ஜுனனுக்கும் கிருஷ்ணனுக்கும் சண்டையா என்று வியந்து போனார்கள்.

யுத்தம் பார்த்த சந்தோஷத்தில் பீமன் உரக்க கத்த, சகாதேவன் அவன் தோளில் கை வைத்து அடக்கினான். பீமனின் குரல் அர்ஜுனனுக்குப் புதிய தெம்பைக் கொடுத்தது. கிருஷ்ணனின் குதிரைகளைக் கடுமையாக இம்சித்தான். அரண்மையை விட்டு வெகுதூரம்

அவைகளைப் போகும்படி செய்தான். தொலைவிலிருந்த படியே கிருஷ்ணன், அர்ஜுனனின் கவசங்களை அறுத்தார். தலைக் கவசத்தை தட்டிவிட்டார். உஷ்ணம் மிகுந்த அம்புகளைச் செலுத்தி அர்ஜுனன் தோலை, ரோமக் கால்களை பொசுக்கினார் அர்ஜுனன் ஆத்திரமானான். கிருஷ்ணருடைய தோளுக்குக் குறிவைத்தான். அவன் அம்புகள் முடக்கப்பட்டன. கிருஷ்ணன் தொலைவிலிருந்து ஆளைத் தேடிக் கொல்லும் சரம் எய்தார். அர்ஜுனன் அவற்றை துண்டாக்கினான். ஆயினும், அந்த அம்பு உள்ளே போய் கந்தர்வன் மார்பிலடித்து, கந்தர்வன் கலவரப்பட்டுக் கத்தினான். அந்தக் கூச்சல் அர்ஜுனனை வெறியாக்கியது. கிருஷ்ணனுடைய மார்புக்கு குறிவைத்தான். உடம்பு முழுவதும் சல்லடையாக்கும் பாணங்கள் அனுப்பினான். அவற்றில் சில கிருஷ்ணனின் உடம்பைப் புண்ணாக்கின. அவன் சியாமள உடம்பிலிருந்து ரத்தம் வழிந்தது. ஊரையே மயக்க வைக்கும் அஸ்திரம் எய்ய, அது அர்ஜுனனால் வெகுதூரம் தூக்கப்பட்டு சுனையில் விழுந்தது. அந்த முயற்சியைச் செய்வதற்குள் அர்ஜுனன் உடம்பில் இரண்டு, மூன்று அம்புகள் துளைத்து நின்றன. அர்ஜுனன் நாகாஸ்திரம் விட, கிருஷ்ணர் பிரம்மாஸ்திரம் எடுத்தார். இரண்டும் உயரே சீறிப்பாய, இந்திரப்ரஸ்தத்து ஜனங்கள் சீறி ஓடினார்கள். அங்கங்கே வீடுகள் தீப்பற்றிக் கொண்டன. தான் செலுத்திய அஸ்திரங்கள் தாக்கப்படாமலிருக்க அதற்குத் துணை அம்புகளை இருவரும் சரமாரியாக விட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கும் நெருப்பு மயம். விஷப்புகை அவர்களது அஸ்திரங்கள் வானத்தில் சீறிக்கொண்டு எதிரும் புதிருமாய் நின்றன. தாக்கும் கணத்தை எதிர்பார்த்து காத்து நின்றன. இன்னும் ஒரு அம்புவிட்டு நாகாஸ்திரத்தைத் தூண்டிவிட்டால் போதும். இன்னும் ஒரு அம்புவிட்டு



பிரம்மாஸ்திரத்தை தூண்டிவிட்டால் போதும். மிகப்பெரிய இழப்பு நேரும். மேலே அஸ்திரங்கள் சீறிக் கொண்டிருக்க, கீழே தூண்டப்படும் அம்புகளை இருவரும் தகர்த்துக் கொண்டிருந்தார்கள். அம்பு விடாமலிருக்க ஒருவரை யொருவர் இரக்கமில்லாமல் அடித்துக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணனின் கழுத்து சீவ, பிறை அம்பு அர்ஜுனன் எடுத்தான். அர்ஜுனன் நெஞ்சு துளைக்கக் கூரிய அம்போடு கிருஷ்ணர் ஜெபித்து கொண்டிருந்தார்.

''நிறுத்துங்கள்... நிறுத்துங்கள்'' வானத்தில் குரல் கேட்டது. தம்பூரின் ரீங்காரம் கேட்டது. ''ஓம் நமோ நாராயணா'' என்று நாரதர் குரல் கேட்டது. ''என்ன கோரம் இது. என்ன விபரீதம் இது. எதற்கு நண்பர்களுக்கிடையே சண்டை. தர்மமும், தர்மமும் அடித்துக் கொண்டால் அதர்மமல்லவா வளரும். அடித்துக் கொள்ளத்தானா நட்பு. பகை கொள்ளவா ஸ்நேகிதம். தயவுசெய்து நிறுத்துங்கள். எதன் பொருட்டு இந்த யுத்தம் என்று எனக்குச் சொல்லுங்கள்.''

நாரதர் இருவரிடம் கைகூப்பி மன்றாடினார். நடுவே நின்று மாறி மாறி பார்த்தார். வீரர்கள் இருவருக்குமே இடைவெளி தேவைப்பட்டது. அம்பெய்வதை நிறுத்தி சீற்றத்தோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சுபத்திரை வெளியே ஓடிவந்தாள். நாரதரின் காலடியைப் பணிந்தாள். நடந்தது அனைத்தையும் விளக்கமாகச் சொன்னாள்.

''கிருஷ்ணா! உன் சாபமென்ன. மறுபடி உன் வாயால் சொல்.'' நாரதர், கிருஷ்ணரை நோக்கி உரக்க கூவினார்.

''இன்று மாலைக்குள் என் அர்க்யத்தில் எச்சில் துப்பிய அந்த கந்தர்வனின் தலை என் காலடியில் உருள வேண்டும்.''

''அவ்வளவுதானே. செய்தால் போயிற்று. தயவு செய்து அஸ்திரத்தைப் பின்னால் எடுத்துக் கொள். அர்ஜுனா! உன் அஸ்திரத்தையும் விலக்கு. அதன் வேகம் குறைத்து கீழே இறக்கு. உங்கள் கோபத்தால் ஊர் எரிகிறதே, பார்க்கவில்லையா?''

''நான் அடைக்கலம் கொடுத்திருக்கிறேன் அந்த கந்தர்வனுக்கு. அவன் தலையைத் துண்டித்துத் தரையில் உருட்ட எவரையும் அனுமதிக்க முடியாது.''

''துண்டித்து உருட்ட வேண்டுமென்று சபதமில்லையே அப்பா.'' நாரதர் கத்தினார்.

''என்ன?'' அர்ஜுனன் வினவினான்.

''கிருஷ்ணர் இன்று மாலைக்குள் தன் காலடியில் அவன் தலை உருள வேண்டுமென்றுதானே சொன்னார். உருள வைத்தால் போயிற்று. அந்த கந்தர்வனைக் கூப்பிடு - அடேய் இங்கு வா'' - உள் நோக்கி கூவினார். கந்தர்வன் பயத்துடன் வெளியே வந்தான். அவன் தோளைப் பற்றி இழுத்துக் கொண்டு நாரதர், கிருஷ்ணனிடம் போனார். அந்த கந்தர்வனுக்குத் துணையாக அர்ஜுனன் உருவிய வாளோடு போனான். பின்னே கந்தர்வி ஓடினாள். அவளுக்குத் துணையாய் சுபத்திரை பின்தொடர்ந்தாள்.

''கிருஷ்ணா, இந்த கந்தர்வனின் தலை உன் காலடியில் உருள வேண்டும். அவ்வளவுதானே?''

''அவ்வளவுதான்.'' கிருஷ்ணன் முகத்தில் விஷமம் கொப்பளித்தது

''அடேய், செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டு இவர் காலில் விழு. என் வினையெல்லாம் போகட்டும் என்று கும்பிடு.'' நாரதர் கட்டளையிட்டார்.



கந்தர்வன் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தான். கந்தர்வியும் பணிந்தாள். ''உருளவில்லையே.'' கிருஷ்ணன் சிரித்தான்.

''உருட்டிவிடலாம். அம்மா கந்தர்வி எல்லா வற்றிற்கும் மூல காரணமான நீ எழுந்து உன் புருஷனை உருட்டு. உன் புருஷனின் தலை கிருஷ்ணனை நோக்கி இருக்கும்படி செய்து, கிருஷ்ணனைச் சுற்றி பிரதட்சணமாக உருட்டிப் போடு. உருளுதண்டம் போடு'' நாரதர் உற்சாகமாயக் கூவினார்.

மனைவி உருட்டிவிட, கந்தர்வன் எல்லாம் அறிந்த கிருஷ்ணனை மனித ரூபமான அந்தப் பரம்பொருளை வலம் வந்தான். மனமார தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டான். கிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தார்.

''போதும் எழுந்திரு'' என்று அவனைத் தூக்கி விட்டார்.

''பகலில் கூடல் பாபம் விளைக்கும். இனிஅவ்விதம் செய்யாதே. போய் வா'' என்றார். கந்தர்வி அவர் தாள் பணிய, ''புருஷனை, வீரனாய் விவேகனாய் ஆக்குவது மனைவியின் கடமை. போகமாக்குவது அல்ல, இதைப் புரிந்து கொள். போய் வா. தீர்க்க சுமங்கலியாய் இரு'' என்று ஆசீர்வதித்தார். அவர்கள் அர்ஜுனனை நோக்கி வந்தார்கள். ''என் தெய்வமே'' என்று கந்தர்வி அவன் காலைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

''நான் தெய்வமில்லையம்மா, நான் ஒரு கருவி தெய்வத்தின் கருவி. என்னைச் சோதிக்க உன்னைத் தூண்டிவிட்டு ஏதோ ஒரு விளையாட்டு நிகழ்ந்திருக்கிறது. என்னவென்று எனக்கும் புரியவில்லை. எதனாலென்று எனக்குத் தெரியவில்லை. தன்னைச் சுற்றி நடப்பது பற்றித்

தெரியாதவன் தெய்வமாக முடியுமா? நான் சாதாரணன். வெறும் மனிதன். உனக்கு என் நமஸ்காரம். போய் வா.”

விடை கொடுத்தான். நாணி தன் நாணை தளர விட்டான். காண்டீபத்தைக் தரையில் ஊன்றி சோர்வாக நின்றான்.

“நீ சாதாரணனில்லை அர்ஜுனா, அசாதாரணன். அற்புதமான வில் வீரன். உனக்கு ஒப்பாரும் மிக்காரும் இவ்வுலகில் இல்லை. உன் எதிரே வில்லெடுத்து வெற்றி பெறப்போகிறவர் எவருமில்லை. என் சரங்களையே தடுக்க முடிந்த உன்னால் எவர் சரத்தையும் எதிர்கொண்டு நிறுத்த முடியும். தர்மத்தைக் காக்க இத்தனை துணிவோடு செயல்படுகிற உன்னால் இங்கே அற்புதங்களைச் செய்ய முடியும்.

அண்ணன் உதவியுடன் புருஷன் தன்னைத் தாக்கி வந்தான் என்கிற அலட்சியம் சுபத்திரைக்கு வந்துவிடக் கூடாதென்பதனாலேயே, அவளுக்குத் தன் புருஷனின் பராக்கிரமத்தைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையை நிறைவேற்றவேண்டுமென்றே இந்த விளையாட்டு யுத்தம் செய்தேன். போர் என்று வந்துவிட்டால் நட்போ, உறவோ இல்லை. தர்மத்தின் பொருட்டு எவரை வேண்டுமானாலும் எதிரியாகக் கொள்ளலாம். எவரை வேண்டுமானாலும் அழிக்கத் துணியலாம். தர்மமே முக்கியம். உறவுகளோ, நட்புகளோ அல்ல என்பது உனக்குத் தெரிந்திருக்கிறதா என்று சோதனை செய்து பார்த்தேன். உறவுக்கிலேசம் உன்னை அதர்மவானாக மாற்றிவிடக் கூடாது நண்பனே. உன்னிலும் உயர்ந்தது உன் தர்மம். அதன் பொருட்டு நீ யுத்தம் செய்தது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. வா, வந்து என்னைத் தழுவிக்கொள்.” கிருஷ்ணன் வில்லை கீழே வைத்துவிட்டு கையை விரித்தான். அர்ஜுனன் காண்டீபத்



தோடு கிருஷ்ணரைத் தழுவிக் கொண்டான். அஸ்திரங்கள் அதனதன் அம்புறாத்துணிக்குள் புகுந்தன. ஊர் குலவை யிட்டு நண்பர்களை வாழ்த்தியது.

“சுபத்திரை! உன் புருஷனுடைய வீரம் எப்படி? அவன் வில் வித்தை எப்படி?” - கிருஷ்ணர் கேட்க, சுபத்திரை பிரியத்துடன் புருஷனின் கையைக் கோத்துக் கொண்டாள். யுத்தத்தில் ஏற்பட்ட அவன் காயங்களைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்தாள். அண்ணாவின் கைப்பற்றி வேகமாக இழுத்து புருஷனோடு அரண்மனைக்குள் போனாள். சுற்றிச் சுற்றி ஓடிவந்து புருஷனையும், அண்ணனையும் உபசரித்தாள். அவ்வப்போது அவள் கண்ட யுத்தத்தை பேசி வியந்தாள். தர்மரும் பீமனும், நகுல சகாதேவர்களும் புருஷனையும் அண்ணனையும் புகழ்வதைக் காதுகுளிரக் கேட்டாள். நெஞ்சுக்குள்ளே இருவரையும் அருகருகே வைத்து வணங்கினாள்.

விருந்து முடிந்து இளைப்பாறி விடைபெற்று, தேர் ஏறி கிருஷ்ணர் இருட்டு நேரத்தில் துவாரகை நோக்கிப் புறப்பட, பின்னால் தொடர்ந்த ஒரு தேர் முன்னேறி கிருஷ்ணர் தேரை மறித்தது. சகாதேவன் தேர்விட்டு இறங்காது கிருஷ்ணனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்ன சகாதேவா! ஏதும் பேச வேண்டுமா?”- கிருஷ்ணர் வாஞ்சையுடன் கேட்டார்.

“நீ பேசு” - சகாதேவன், கிருஷ்ணரை ஒருமையில் அதட்டினான்.

“என்ன பேசுவது?”

“எதற்கு இந்த யுத்த நாடகம்? எது குறித்து இந்த வீர விளையாட்டு? எனக்குச் சொல்லிவிட்டுப் போ.”

“மறுத்தால்?” கிருஷ்ணன் கண்மூடி வினவினார்.

''உன்னோடு யுத்தம் செய்வேன். என் யுத்தம் எது வென்று உனக்குத் தெரியும் கிருஷ்ணா! உன்னைக் கட்டிப் போடுவேன். உன்னைக் கட்ட என்னால் முடியும் என்று உனக்குத் தெரியும் கிருஷ்ணா. உண்மையைச் சொல், எதற்கு இந்த நாடகம்?'' - சகாதேவன் மீண்டும் அதட்டினான்.

''உண்மையான யுத்தம் வரப்போகிறது சகாதேவா. வெகுவிரைவில் வரப்போகிறது.''

''யாருக்கும், யாருக்கும்?''

''உனக்கே தெரியும்.''

''சரி, நீ அங்கே என்ன செய்வதாய் உத்தேசம்?''

''ஒரு உத்தேசமுமில்லை. ஒரு ஓரமாய் நின்று வேடிக்கை பார்ப்பேன்.''

''ஏன், இரண்டு பக்கமும் அதர்மமுள்ள யுத்தமா அது?''

''இல்லை, தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் உள்ள யுத்தம்.''

''அப்படியானால் நீ எந்தப் பக்கம்.''

''உங்கள் பக்கம் சகாதேவா.''

''சத்தியம் செய்.''

''என்னவென்று...'' கிருஷ்ணர் கண்விழித்து அவனை உறுத்துப் பார்த்தார்.

''நாங்கள் இந்த பஞ்ச பாண்டவர்கள் தர்மத்தின் பக்கமே எந்நாளும் நிற்க வேண்டும். அதற்குத் துணையாய் நான் இருப்பேன் என்று சத்தியம் செய். அதர்ம வழியில் எங்கள் மனசுகூட போகாமலிருக்க உன்னால் முடிந்த தெல்லாம் செய். எங்களை தர்மத்தின் பக்கமே இழுத்துக் கொண்டு போவேன் என்று சத்தியம் செய். ஒரு நாளும் அதர்மத்தின் பக்கம் போகவிட மாட்டேன் என்று உறுதி கொடு. எங்களை தீதிலிருந்து காப்பாற்று கண்ணா.''



கிருஷ்ணன் மெலியதாய் சகாதேவனை நோக்கி, வாஞ்சையுடன் புன்னகை செய்தான்.

''சகாதேவா! ஞானியிலும் சிறந்த ஞானியே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் இன்று பேசியது பிரபஞ்ச ரகசியம். இதை எவரிடமும் சொல்லாதே. தர்மம் காக்கவே நான் உங்களோடு சேர்ந்திருக்கிறேன். உங்களை என் பக்கம் எடுத்திருக்கிறேன், அதர்மத்தை அழிப்பது என் வேலை. சகாதேவா, நீ சும்மா இரு.''

''சும்மா இரு என்றால் யுத்தம் செய்யாதே என்று என்னைத் தடுக்கிறாயா? விலகியிருக்கச் சொல்கிறாயா?''

''யுத்தம் செய். சும்மாயிரு.''

கண்ணன் கை தூக்கி சகாதேவனை ஆசிர்வதித்தான். கண்ணன் கை தூக்கி சகாதேவனை ஆசீர்வதித்தான்.

கண்ணன் கண்களை உறுத்து நோக்கினான். தன் கண்களால் அவன் கண்களை உறுத்து நோக்கினான். சகாதேவனுக்குப் புரிந்தது, அந்தி சரிந்து மேல் வானத்தின் கடைசி சிகப்பு ரேகை மறையும் நேரத்தில் சகாதேவன் மனசு கூட்டி கிருஷ்ணனை வணங்கினான். வலம் வந்தான். வழி விட்டு நின்றுகொண்டான்.

கிருஷ்ணன் தேர் புறப்பட, எங்கும் இருள் சூழ்ந்தது. சகாதேவன் ஊர் எல்லையில் அந்தக் குளத்து விளிம்பில் பெருமூச்சோடு உட்கார்ந்தான். கண்மூடி தியானத்தில் ஆழ்ந்தான்

யுத்தம் வரும் என்பது அவன் உள்மனதிற்குத் தெரிந்து விட்டது. எந்த சலனமுமின்றி அதற்குத் தயாராய் இருந்தான்.

**முற்றும்**